விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை (09.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

# முன்னாள் பிரதமர் ரணிலை தவிர
# ஐ.தே.கட்சியினருக்கு
# அரசுடன் இணையுமாறு
# மகிந்த தரப்பு அழைப்பு

(கொழும்பு) முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தவிர ஏனைய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அரசுடன் இணையுமாறு மகிந்த தரப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேற்படி அழைப்பை நேற்றைய தினம் விடுத்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## வங்கிக்குச் சென்ற குடும்பஸ்தர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வங்கிக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று திருநெல்வேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## தனிமையில் இருந்த முதியவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனிமையில் வசித்து வந்த நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கோப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## கைதடிப் பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தனிமையில் இருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கைதடி கிழக்கை சேர்ந்த இரா

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியுடன் மீண்டும் இணைந்து பணியாற்ற தயார்

### த ஹிந்து நாளிதழுக்கு ரணில் செவ்வி



(சென்னை)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மீண்டும் இணைந்து பணியாற்ற தயாராகவுள்ளதாக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க த ஹிந்து நாளிதழுக்கு செவ்வி வழங்கியுள்ளார்.

03ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு அபிவிருத்திக்காக அனைவரும் ஒன்றுபடுங்கள்

### ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான விசேட ஜனாதிபதி செயலணியின் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் அதை எதிர்காலத்தில் பலமாக நடைமுறைப்படுத்த அனைத்து தரப்பினரும் ஒன்றுபடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணியின் நான்காவது கூட்டம் நேற்று முற்பகல் ஜனா

23ஆம் பக்கம் பார்க்க....

## விக்னேஸ்வரனின் மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் பதவி நீக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் அவரால் தாக்கல்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியை எதிர்த்து ஐ.தே.கட்சியினர் எதிர்ப்பு பேரணி

(கொழும்பு)

பாராளுமன்றில் பெரும்பான்மையை காட்டாது அரசியலமைப்புக்கு விரோதமான முறையில் செயற்பட்டு வரும் ஜனாதிபதி பாராளுமன்றை கலைப்பதற்கு நீதிமன்றத்தை நாடியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டுவதோடு, அதற்கு தாம் வன்மையாக எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறி நேற்றைய தினம் எதிர்ப்பு

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரியுடன் பேச்சுவார்த்தைக்கு தயார்

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில், ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாம் தயாராகவே இருக்கிறோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் செயற்பாட்டால் சர்வதேச ரீதியாக நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி செயலணியில் வியாழேந்திரன் பங்கேற்பு

### கூட்டமைப்பினர் முகஞ்சுழிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் நேற்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் பல பகுதியிலும் கொட்டித் தீர்த்த கனமழை

### நாளை சனிக்கிழமை வரை தொடரும்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட வடக்கில் மழை கொட்டித் தீர்க்கிறது. இதனால் தாழ்நிலப் பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு காணி விடுவிப்பு பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது

### ஜனாதிபதி செயலணியில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு படையினர் வசமுள்ள காணிகளை டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் இறுதிக்

23ஆம் பக்கம் பார்க்க....



## ரணிலுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு கையளிப்பு

(கொழும்பு)

பதவி விலக்கப்பட்டுள்ள நிலையில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையில் தங்கியிருந்து பொது சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்துவதாக அமைச்சர்களின் செயலாளர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் நேற்

24ஆம் பக்கம் பார்க்க....

# வவுனியா பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா மடுகந்த பொலிஸ் பிரிவிலிருந்து இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், நேற்று மடுகந்த, மயிலங்குளம் பகுதியில் குளத்துடன் காணப்படும் வயல் கிணறு ஒன்றிலிருந்து மாடு மேய்ப்பதற்குச் சென்ற இளைஞர் ஒருவர் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட சடலம் ஒன்றினை அவதானித்துள்ளார். இதையடுத்து மடுகந்த பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை மடுகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-281)


NSB

## பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 01.06.2017 முதல் 30.09.2017 வரை அடகு வைக்கப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர் வரும் 01.12.2018 தொடக்கம் 09.12.2018 வரையான காலப் பகுதியில் அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

| | கிளை | பகிரங்க ஏலம் நடைபெறவுள்ள திகதி |
|---|---|---|
| 01 | சங்கானை | 01/12/2018 |
| 02 | யாழ்ப்பாணம் | |
| 03 | மானிப்பாய் | |
| 04 | திருநெல்வேலி | |
| 05 | மன்னார் | |
| 06 | வவுனியா | |
| 07 | காரைநகர் | 02/12/2018 |
| 08 | கிளிநொச்சி | |
| 09 | மல்லாவி | |
| 10 | சாவகச்சேரி | 08/12/2018 |
| 11 | ஊர்காவற்றுறை | |
| 12 | கோப்பாய் | |
| 13 | முல்லைத்தீவு | |
| 14 | நெல்லியடி | |
| 15 | பருத்தித்துறை | |
| 16 | வங்காலை | |
| 17 | அச்சுவேலி | 09/12/2018 |
| 18 | சுண்ணாகம் | |
| 19 | யாழ்ப்பாணம் 2ம் கிளை | |
| 20 | கொடிகாமம் | |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**வட பிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி** (6222)


# 12 வயது சிறுமியை கடத்தி தகாத முறையில் நடந்த 19 வயது இளைஞன் கைது

யாழ். பருத்தித்துறையில் 12 வயது பாடசாலை மாணவியை கடத்திச் சென்று தகாத முறையில் நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டு 19 வயது இளைஞ்ன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பாடசாலைக்கு காலை சிறுமி சென்ற நிலையில் மாலை சிறுமி வீடு திரும்பவில்லை.

அதனால் பெற்றோர் சிறுமியை தேடி அலைந்த நிலையில் அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், சிறுமியின் வீடு அமைந்துள்ள பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவரின வீட்டுக்கு சென்ற பெற்றோர் அங்கு அறை ஒன்றில் இருந்து கையில் காயங்களுடன் சிறுமியை மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து மீட்கப்பட்ட சிறுமியை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சிறுமி கடத்தி வைக்கப்பட்டிருந்த வீட்டில் இருந்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது கடந்த 3 மாத காலமாக தான் சிறுமியை காதலித்து வந்ததாகவும், அதனாலேயே தனது வீட்டுக்கு அழைத்து சென்றதாகவும் தெரிவித்துள்ளார். குறித்த இளைஞனிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-9)

# கௌரவிப்பு விழா

வள்ளுவர்புரம் முதியோர் கௌரவிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஜீவஜோதி பகல் பராமரிப்பு இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் என்.தசரதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கிருபா லேணர்ஸ் அதிபர் அ.கிருபாகரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)




## அறிமுக விற்பனை

தமிழ், ஸ்போர்ட்ஸ், கார்ட்டூன்ஸ், இங்கிலீஸ் மூவிஸ், அனிமல் சானல்கள், இங்கிலீஸ் செய்திகள் உள்ளடங்கலாக 310 சானல்கள் வேலை செய்யக்கூடிய HD ரிசீவர் 10 மாத இலவச சந்தாவுடன்

**Rs.4000/-** (Receiver only) **Rs.6000/-** (Full set)

குறுகிய காலம் மட்டும்

**SATS-TECH ENGINEERS**

No. 56/15, STANLEY ROAD LANE, OLD POST OFFICE ROAD JAFFNA, PHONE 021-2228812/Mob 0768861160 (C-4366)



## கூறுவிலை கோரல் - 2019

**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் - கிளிநொச்சி**

மேற்படி பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை நடாத்துதல், பாடசாலை நிகழ்வுகளின் போது புகைப்படம் எடுத்தல் ஆகியவற்றுக்கான கூறுவிலை கோரப்படவுள்ளது.

15.11.2018 தொடக்கம் 19.11.2018ஆம் நாள் வரை விண்ணப்பங்களை வித்தியாலய அலுவலகத்தில் பெற்று 26.11.2018 ஆம் நாள் 10.00 மணிக்கு முன்னதாக ஒப்படைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள், விதிகள் தொடர்பாக வித்தியாலய அலுவலகத்தில் பார்வையிடவும்.

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று வெள்ளிக்கிழமையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை வரை (09,10,11) ஆகிய திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி 2-ம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.

அருள்வாக்கின் மூலம் திருமணதடை,கல்வித்தடை, வெளிநாட்டு பயணத் தடை, குழந்தை பேறு, குடும்ப பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத் தருவார்.

**பூஜை நேரம்- காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

*குறிப்பு:-* கலாசார உடையுடன் வருகை தரவும்.

தொடர்பு-021 221 9127/077 801 2226 (6376)



குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பமாகின்றது**

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- சித்தர்கள் வழிவந்த காயகல்ப்பப் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது

**மாணவர்கள் கல்வியில் மேம்பட**
**மாணவர்கள் உயர்புள்ளிகள் பெற்று சித்தியெய்திட**
**நோய் எதிர்ப்பு சக்தி பெற்று ஆற்றல் பெருகிட**
**குடும்பத்தில் அமைதி நிலவி ஆனந்தம் பெருகிட**

அனைவரும் வந்து பயிற்சி பெற்று பலன் பெற்றிட வாருங்கள்

பயிற்சி வழங்குபவர்:- **மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி குமார அழகப்பன் (தமிழ்நாடு, இந்தியா)**

காலம் : 10.11.2018 தொடக்கம் 16.11.2018 வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
இடம் : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

10.11.2018 சனி, 11.11.2018 ஞாயிறு தினங்களில் அகத்தாய்வு 2ம் நிலை காலை 9.00 மணிக்கு நடைபெறும். மேலும் அடுத்து வரும் வாரங்களில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தரவிருக்கும் பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் வழங்கப்படவிருக்கிறது என்பதையும் அறியத் தருகின்றோம்.

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்,**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல.:021 222 2772**
(C-4365)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி இரகுநாதன்

(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர்)



சாத்தனை, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் களச்சியந்தோட்டம், கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரகுநாதன் 07.11.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்), ஆனந்தமலர் தம்பதியரின் மருமகனும் அம்புலிதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் அரவிந்தன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), பிரமீளா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), பிரவீணாவின் (லண்டன்) அன்புத் தந்தையும் ராஜலக்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற விஜயலக்சுமி (ஆசிரியை), பாக்கியலக்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சத்தியநாதன், பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் துஷிகரன் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), செந்தூரன் (லண்டன்), காயத்திரி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஒப்பிலாமணி (ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்), சிம்மாசனி, காலஞ்சென்ற சுரேந்திரன் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சறோஜினி, கௌரி ஆகியோரின் மைத்துனரும் யாதுரி, யாக்னவி (சிங்கப்பூர்), ரிஷிகேசன் (மாணவன் - யாழ்.இந்துக் கல்லூரி), வர்ஷிகன் (மாணவன் - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), திவ்யன், கிருத்திகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு களச்சியந்தோட்டம், கரவெட்டி கிழக்கு வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் வேதக்களி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4369)

**களச்சியந்தோட்டம்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

# ஜனாதிபதி மைத்திரியுடன் மீண்டும் இணைந்து பணியாற்றத் தயார்

## த ஹிந்துவுக்கு ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மீண்டும் இணைந்து பணியாற்றத் தயார் என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். த ஹிந்து நாளிதழுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தற்போதும் இணைந்து பணியாற்ற தயாரா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க,

எனக்கு அவருடன் இணைந்து பணியாற்றுவது குறித்து எந்த பிரச்சினையும் இல்லை. இந்த கேள்வியை நீங்கள் அவரிடம் கேட்க வேண்டும். அரசியலமைப்பில் தனிப்பட்ட பார பட்சங்களுக்கு இடமில்லை எனவும் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றம் விரைவில் கூட்டப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றமே அதியுயர் அதிகாரங்களை கொண்டது. இதனையே சபாநாயகர் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான போதிய எம்.பிக்கள் எம்மிடம் உள்ளனர். அவர்களிற்கு போதிய பெரும்பான்மையில்லாதன் காரணமாகவே பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு அவர்கள் தயங்குகின்றனர்.

பாராளுமன்றத்தினை கூட்டுவதற்கு தாமதமாவது எனக்கு கவலையளிக்கின்றது. இதன் காரணமாக நாடு மேலும் ஸ்திரமின்மையை நோக்கி தள்ளப்படுகின்றது. தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக நாங்கள் நீதிமன்றம் சென்றாலும் அவர்கள் பாராளுமன்றத்திற்கு சென்று இதற்கு தீர்வை காணுங்கள் என தெரிவிப்பார்கள் என குறிப்பிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க இந்திய நீதிமன்றங்களுக்கும் இலங்கை நீதிமன்றங்களிற்கும் இந்த விடயத்தில் வித்தியாசம் உள்ளது என சுட்டிக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்த பின்னர் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் என்ற கேள்விக்கு, புதிய அமைச்சரவையை அறிவிக்கவேண்டியிருக்கும். முன்னைய அமைச்சரவையில் இருந்த பலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் இணைந்து கொண்டுள்ளனர்.

, புதிய பிரதமர் நியமிக்கப்படுவதற்கு முன்பிருந்த நிலையே தொடர்கின்றது என சபாநாயகர் தெரிவித்துள்ளார். அவர்கள் தமது பெரும்பான்மையை நிரூபிக்க தவறினால் அந்த நிலையே தொடரும் என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஏழு அமைச்சர்கள் நேற்று நியமனம்

(கொழும்பு)

இரண்டு புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் ஐந்து இராஜாங்க அமைச்சர்களும் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு :-

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்

சுசில் பிரேமஜெயந்த - பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், நீதி அமைச்சர், பந்துல குணவர்த்தன - சர்வதேச வர்த்தகம், முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர்

இராஜாங்க அமைச்சர்கள்

அநுர பிரியதர்ஷன யாப்பா-நிதி இராஜாங்க அமைச்சர், சாலிந்த திசாநாயக்க -சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர், சீ.பீ.ரத்நாயக்க -போக்குவரத்து இராஜாங்க அமைச்சர், எஸ்.எம்.சந்திரசேன- சமூக வலுவூட்டல் இராஜா ங்க அமைச்சர், லக்ஷ்மன் வசந்த பெரேரா - சர்வதேச வர்த்தக இராஜாங்க அமை ச்சர்.

புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனம்

மூன்று அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமிருந்து தமது நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டனர்.

அமைச்சுக்களின் செயலாளர்களின் பெயர்கள் பின்வருமாறு.

ஜே.ஜே.ரத்னசிறி-பொது நிர்வாக உள்நாட்ட லு வல்கள், நீதி அமைச்சு, எஸ்.பீ. கொடிகார -சர்வ தேச வர்த்தகம், முதலீட்டு அபி விருத்தி அமைச்சு,ஆர். டபிள்யூ. ஆர்.பேமசிறி - நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சு. (இ)

## விசேட மேல் நீதிமன்றம் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்

### நீதியமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

மூவர் அடங்கிய விசேட மேல்நீதிமன்றம் தொடர்பில் தீர்மானம் ஒன்றை விரைவில் எடுக்கவுள்ளதாக புதிய நீதியமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்னும் சில நாட்களில் அமைச்சரவை முழுமையாக பூர்த்தி செய்யபடு மென வும், அதற்கமைய புதிய அரசாங்கம் ஒரு வருடத்துக்கு மேலாக நாட்டை ஆட்சி செய்யுமெனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7)



## புதிய அரசிற்கு எதிரான எந்தவொரு பிரேரணைக்கும் ஆதரவளிக்கத் தயார்

### ஜே.வி.பி.தலைவர் அநுர அறிவிப்பு

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன - மகிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்திற்கு எதிரான எந்தவொரு பிரேரணைக்கும் ஆதரவளிக்கத் தயார் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.


புதிய அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினரும் கடும் அழுத்தங்களையும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்ற நிலையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசியல் சதித்திட்டத்தை தோற்கடிப்பதற்கான எந்தவொரு பிரேரணைக்கும் தமது கட்சி ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் சதித் திட்டங்கள் தொடர்பில் மக்களை தெளிவூட்டும் வகையில் நாட்டின் நான்கு முக்கிய இடங்களில் இன்று விழிப்புணர்வு நிகழ்வுகள் மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கொழும்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி இதுபோன்றதொரு தெளிவூட்டல் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



இதேவேளை, நாட்டின் ஜனநாயகத்தை மதிக்கும் வகையில் நாடாளுமன்றம் உடனடியாக கூட்டப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## 14,000 பேரின் கையொப்பத்துடன் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக மகஜர்

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு எதிராக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் 14,000 பேரின் கையொப்பத்துடனான மகஜர் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியின் செயலாளரிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ராஜித சேனாரட்ன சுகாதார அமைச்சராக பதவி வகித்த போது, பல்வேறு



ஊழல், மோசடிகளில் ஈடுபட்டதாகவும், இது தொடர்பில் விசாரணையொன்றை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் கையளிக் கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார். (இ-7)

# இங்கிலாந்து பிடியில் இலங்கை



இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் ஜென்னிங்ஸ் சதம் கடந்து கைகொடுக்க 2ஆவது இன்னிங்சில் 322 ஓட்டங்கள் குவித்த இங்கிலாந்து அணி, 461 ஓட்டங்களால் வலுவான முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் காலியில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 342, இலங்கை 203 ஓட்டங்கள் எடுத்தன. பின் 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 2ஆம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 38 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பேர்ன்ஸ் (11), ஜென்னிங்ஸ் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஜென்னிங்ஸ் அபாரம்**

நேற்று, 3ம் நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இங்கிலாந்து அணியின் பேர்ன்ஸ் (23) 'ரன் அவுட்' ஆனார். மொயீன் அலி (3), அணித் தலைவர் ஜோ ரூட் (3) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினர். பின் இணைந்த ஜென்னிங்ஸ், பென் ஸ்ரோக்ஸ் ஜோடி ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்பாக ஆடிய ஸ்ரோக்ஸ் அரைச்சதம் கடந்தார். நான்காவது விக்கெட்டுக்கு 107 ஓட்டங்கள் சேர்த்த போது ஸ்ரோக்ஸ் (62) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பட்லர் (35), போக்ஸ் (37) ஓரளவு கைகொடுத்தனர். அபாரமாக ஆடிய ஜென்னிங்ஸ் சதம் கடந்தார்.

இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கு 322 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. ஜென்னிங்ஸ் (146) ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை சார்பில் டில்ருவான் பெரேரா, ஹெரத் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**கடின இலக்கு**

பின் 462 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணி, நேற்றைய 3ம் நாள் ஆட்டநேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 15 ஓட்டங்களை எடுத்திருந்தது. கருணாரத்ன (7), கௌசல் சில்வா (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2017/2018 (வெளிவாரி)**
**Bachelor of Business Management (Online) Degree Programme - 2017/2018 (External)**
**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2017**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக்கான தகைமைகள்
- க.பொ.த. (உ/த) பரீட்சை - 2016 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்
  அல்லது
- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்
- பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவ மாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

முக்கிய குறிப்பு :- இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

மாணவர் தெரிவு :-
விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:
1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்
விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 07.12.2018 (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு: 021 222 1106, 021 222 3610, 021 222 3612 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
07.11.2018 (C-4367)


# மரண அறிவித்தல்



## செல்லத்துரை மயூதரன்

**(உரிமையாளர் - சிவசக்தி அரைக்கும் ஆலை, பல்பொருள் வாணிபம்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1978.10.15 | 2018.11.07 |

சிவன் கோவில் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மயூதரன் (உரிமையாளர் - சிவசக்தி அரைக்கும் ஆலை, பல்பொருள் வாணிபம்) 07.11.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை - பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும் கந்தசாமி - பாலசரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் பிரசாந்தியின் அன்புக் கணவரும் மதுசனின் (மாணவன் தரம் - 4 யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) அன்புத் தந்தையும் யசோதரன், சுகந்தி, சுதாகரன், சுதர்சினி, சுரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரூபிகா, சிவசொரூபன், ரூபி, சத்தியவண்ணன், சிந்துஜா ஆகியோரின் மைத்துனரும் ஆர்த்திகா, ஹரிஸ், விபூசா, நீருயா ஆகியோரின் மாமனாரும் பிருந்தன், பிருந்தா, கிருஷன், அருநிசா, கபின், கீர்த்தீஸ் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4372)

இல.106, டச்சு வீதி,
சாவகச்சேரி.

தகவல்:-
குடும்பத்தினர்
077 175 1360

# மகிந்தவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது

## ரணில் திடமான நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் மகிந்த ராஜ பக்ஷவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் ஒருவருக்கே பிரதமர் பதவியை ஏற்க முடியும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அதாவது 19 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அமைய பிரதமர் ஒருவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதாயின் அதனை நாடாளுமன்றத்தால் மாத்திரமே செய்ய முடியும்.

அதுவே 19 ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே சபாநாயகரின் கருத்துக்கு அமைய எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் மகிந்த ராஜபக்ஷவே தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

ஆனால் அவர்களால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதே எனது திடமான நம்பிக்கை என தெரிவித்துள்ளார். (இ-7)


### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.-


## இலங்கை அரசு வசம் இருந்த தமிழக நாட்டுப்படகு விடுவிப்பு




(யாழ்ப்பாணம்)

கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நாகை மாவட்டத்திலிருந்து இளையராஜா என்பவருக்கு சொந்தமான நாட்டுப் படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதாக இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்தனர்.

இந்நிலையில் நாட்டுப்படகுக்கான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது படகின் உரிமையாளர் இளையராஜா ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி ஜூட்சன் முன்னிலையில் ஆஜரானார்.

வழக்கை விசாரித்த நீதிபதி எதிர்காலத்தில் இலங்கைக் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தால் படகை விடுவிக்க முடியாது என எச்சரித்து விடுவித்தார். விடுவிக்கப்பட்ட நாட்டுப் படகு இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் ஊடாக இந்திய பாதுகாப்புத் துறை உதவியுடன் கொண்டு செல்லப் படவுள்ளது. (இ-9)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் குழப்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் திடீரென வைத்திய அத்தியட்சகராக இன்னொருவர் பொறுப்பேற்க வந்ததால் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அத்தியட்சகராக புதிய ஒரு வர் நேற்று முன்தினம் புதன்கிழமை நியமிக்கப்பட இருப்பதாக வெளி யான தகவலையடுத்து வைத்தியர்கள் உடனடியாக வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் கையொப்பம் பெற்று வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் சேர்ப் பித்ததுடன் அத்தியட்சகரை மாற்றி குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் எனவும் எழுத்து மூலமாக கோரி க்கை விடுத்திருந்தனர்.

ஆளுநரின் பணிப்பின் பெயரில் இடமாற்றத்தை தற்காலிகமாக நிறு த்துவதாக வைத்தியசாலை நிர்வா கத்திடம் தெரிவிக்கப்பட்டது. இதனால் மாலை 4மணி வரை எந்த சல சலப்பும் இன்றி அத்தியட்சகர் அச்சுதன் தலைமையில் வைத்தியசாலை பணிகள் இடம்பெற்று வந்தது. இந் நிலையில் மாலை 4.30 மணியளவில் தயாளினி மகேந்திரன் என்பவர் வைத்திய அத்தியட்சகராக பொறுப் பேற்க வந்ததை அடுத்து வைத்தியசாலை உத்தியோகத்தர்களிடையே குழப்ப நிலை ஏற்பட்டது.

மருத்துவ நிர்வாக சேவையைச் சேர்ந்த திருமதி தயாளினி மகேந்திரன் மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இது தொடர்பாக தனக்கு உத்தியோகபூர்வமான அறிவித்தல்கள் எவையும் கிடைக்கவில்லை என முன்னைய அத்தியட்சகர் ப.அச்சுதன் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக தொடர்ச்சியான குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதுடன் புதிய அத்தியட்சகர் வரும் போது பழைய அத்தியட்சகர் வைத்தியசாலையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-30)


### காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.



### தொண்டர்கள் தேவை

**தற்கொலைகளைத் தடுப்போம்!**

*உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?*

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் நாம் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.

அடுத்த பயிற்சி நெறி மிக விரைவில்.

*மத சார்பற்ற அமைப்பு.*

உடனே அழையுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

077 900 8776 (மு.ப. 9.00 - பி.ப. 1.00)


# ஜீவிதத்தை பரிதவிக்க வைத்த முதலாம் ஆண்டு நினைவலைகள்

## சிவதாசன் லோகேஸ்வரி

மலர்வில்: 07.12.1958 உதிர்வில்: 21.10.2017



இல்வாழ்வில் கரம் பிடித்த
துணையான என் அருமருந்தே
குவலயம் போற்றிடும்
குதூகல வாழ்விலே
அருமையாய் ஆண் மகனை
பெற்றெடுத்து
இனிய மனைவியாய்
அன்பு நல்ல தாயாய்
வாழ்ந்து மகிழ்ந்திட்ட என்னவளே
காரணம் இல்லாமல்
காலன் கவர்ந்ததனால்
உனைப்பிரிந்து கலங்கி-நாம்
வாடுகின்றோம்!
இறைவன் திருப்பாதம் சென்ற
என்னவளே நாம் தேறிடவே
ஆசி பல தந்து அருள்புரிவாய்
என்றும் உன்னோடு வாழ்ந்திடும்

திதி: பூர்வபட்ச துதியை

இல.358, ஒஸ்மானியா கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

கணவன்- சிவதாசன்
மகன்- நிலக்ஷன்

## இராசி பலன்

**மீனம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் நிதானம் அவசியம்.

**இடபம்:** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வள்ம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** தொழில் நலன் கருதிய திட்டங்கள் வெற்றி பெறும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலன் கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிகாரிகள் அனுகூமாக நடந்து கொள்வர், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

### கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| சனி | குரு, சந். புத | சூரி, சுக் | |

09.11.2018

ஐப்பசி 23, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

துதியை முன்னிரவு 10.29 மணிவரை

அனுசம் முன்னிரவு 10.09 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

நான்காம் ஐப்பசி வெள்ளி

வளவன்

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**கன்னி:** உடன் பிறப்புக்கள் மூலம் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.



திருவண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கேதார கௌரி விரத பூர்த்தி பூஜையின் போது...

# நீர்வேலி கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவில் மஹாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

ஆலய திருப்பணிச்சபைத் தலைவர் த.நடராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

வாழ்த்துரைகளை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், வித்தியாபூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) ஆகியோர் ஆற்றுவர். நூலின் வெளியீட்டுரையை செந்தமிழ்ச் சொல்லருவி விரிவுரையாளர் ச.லலீசனும் நூல் நயப்புரையை இந்துசாதனம் ஆசிரியர் பிரம்மஸ்ரீ தியாக மயூரகிரிக் குருக்களும் வழங்குவர்.

நூலின் முதற்பிரதியை ஆலய பிரதமகுரு வெளியிட்டு வைக்க முதற் பிரதியை கலாநிதி ஆறு.திருமுருகன் பெற்றுக்கொள்வார். திருப்பணிச் சபை செயலாளர் க.மகாலிங்கம் நன்றியுரை ஆற்றுவார். (இ-7)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராமநாதன் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் அருணாசலம் மண்டபத்தில் அதிபர் திருமதி.கே.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் (பழைய மாணவி), சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலாளர் சி.ஜெய காந்த், உடுவில் வலய கல்வி அலுவலர் த.மாதவன் ஆகியோர் கலந்து கொள்வர் ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனும் நினைவுப் பேருரையை கொழும்பு பல்கலைக்கழக நூலக சிரேஷ்ட உதவியாளர் திருமதி. தயாநந்தி சிறிதரன் (பழைய மாணவி) ஆகியோர் வழங்குவர். (இ)



யாழ். வேலணை மத்திய கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை கல்லூரியின் சேர்.வை.துரைச்சுவாமி அரங்கில் கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பழைய மாணவர்களுக்கான சேர்.வை.துரைச்சுவாமி ஞாபகார்த்த "ஞானவியன்மணி" விருதினை பழைய மாணவர்க்ளான கலாநிதி செ.திருநாவுக்கரசு,யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் ஆகியோர் ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி திருமதி. சறோஜினி இளங்கோவனிடமிருந்து பெற்றுக்கொண்டனர். (இ-9)



தீபாவளி திருநாளில் "யாழின் பசுமை" எனும் தொனிப்பொருளில் மரநடுகை திட்டமொன்று "கைகொடுப்போம்" சமூக மேம்பாட்டு அமையத்தின் ஊடாக அதன் செயலாளர் க.மணிவண்ணன் ஒழுங்கமைப்பில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# ஆசிரியர் பேராளர் மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண ஆசிரியர் பேராளர் மாநாடு இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண இலங்கை ஆசிரியர் சேவை சங்கச் செயலாளர் ஸ்ரீகந்தநேசன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொண்டு "வடமாகாண கல்வி நிலையும் ஆசிரியர்களின் வகிபாகமும்" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார். (இ)






தீபாவளி தினத்தை முன்னிட்டு, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பப் பெண்களுக்கு இராணுவத்தினரால் புத்தாடைகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாதுகாப்புப் படைத்தலைமையகத்தில் இடம்பெற்றது. பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் வழிகாட்டலின் கீழ் வைத்தியர் கிருசாந்தின் உதவியில், யாழ்.மாவட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட 100 பெண்களுக்கு புத்தாடைகள் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், இராணுவத்தினர், மகளிர் அமைப்புக்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கி வரும் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் கல்லூரியின் அதிபர் தேசமானிய லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் இடம்பெற்றது.

ஆங்கில, சிங்கள, கணனி டிப்ளோமா பாடநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்களும் பாடநெறியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் என்பன வழங்கப்பட்டன. இவர்களுக்கான சான்றிதழ்கள், விருதுகளை நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன், அவரது பாரியார் திருமதி. கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

## தமது சுயலாப அரசியலுக்காக

# தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உதாசீனம்

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு



கடந்த ஆட்சியில் எமது மக்களுக்கு பயன் தராமல் முடங்கிக் கிடந்த மீள் குடியேற்றம்.புனர்வாழ் வளிப்பு,வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் பணிகளை முழு ஈடுபாட்டுடன் விரைவுபடுத்தியுள்ளேன்.

அரசியல் தீர்வை வலியுறுத்தும் அதேவேளை எமது மக்களின் முதன்மை பிரச்சினைகளான காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கல் மற்றும் வீடற்றோருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தல் போன்ற பல பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபாலவும், பிரதமர் மகிந்த ராஜபக்சவும் தமது முழுமையான விருப்பத்தையும், உதவியையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்கள் என்று மீள்குடியே ற்றம், புனர்வாழ்வளிப்பு,வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அமைச்சில் நடைபெற்ற விஷேட பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பத் திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ்,

இந்த அமைச்சானது கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே கிடைத்திருந்தால் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பல பிரச்சினைகளை தீர்த்து வைத்திருப்பேன். தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கேட்டு தமிழ்மக்கள் வீதியில் இறங்கி போராடும் துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட இடமளித்திருக்க மாட்டேன்.

நான் ஆட்சியில் தொடருவதற்கு தடையாக இருந்த தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ்மக்களையும், தமிழ் மக்களுக்கு அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளையும் மறந்து தமது நலன்களை மட்டும் முன்னிறுத்தியே செயற்பட்டதால் நிரநதரத் தீர்வுக்கும், நிலையான அபிவிருத்திக்கும் தீர்வு காண்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார்கள்.

இப்போதும் தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழலை தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பான சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறவிடக்கூடாது.

சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் உரிமைகளையும் உதாசீனம் செய்யக்கூடது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தமிழர் பிரதேசங்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்று அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் விரும்புகின்றார்கள். எமது மக்களின் விருப்பத்தை அண்மையில் நாடாளுமன்ற. வளாகத்திற்கு முன்பாக நடைபெற்ற கூட்டத்திலும், ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தீபாவளி நிகழ்விலும் வெளிப்படுத்தியுள்ளேன்.

எனவே தமிழ்த் தலைமைகள் என்போர் மிக முக்கியமான இக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சரியான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். (இ-7)

## குழாய்க் கிணறு அமைப்போர் அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

குழாய்க்கிணறு அமைக்கும் தொழிலில் ஈடுபடும் சகலரும் துளையிடும் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முதல் நீர் வளச் சபையில் பதிந்து பிரதேச சபையின் வியாபார அனுமதிப்பத்திரத்தினைச் சமர்ப்பித்து அனுமதியினை பெற வேண்டும். அத்துடன் ஒவ்வொரு குழாய்க் கிணறு அமைப்பதற்கும் நீர்வள சபையின் பரிந்துரை பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் அமைத்தல் வேண்டும் என வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரன் அறிவித்துள்ளார். (இ)

## உணவுப் பொதிகள் வழங்கல்



(கரணவாய்)

பொற்பதி மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாகத்தினரால் பொற்பதி புலம்பெயர் மக்களிடம் உதவி பெற்று குடத்தனையில் உள்ள 89குடும்பங்களுக்குரிய உணவுப்பொதிகள் மக்கள் நலன்புரிச்சங்கத்தலைவர் அ.அசோக் தலைமையில் வழங்கப்பட்டன. (இ-60)

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காகவும் 01.01.2019 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவை நிபந்தனைகள்

1.நியமிக்கப்படும் சட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை 02 ஆகும்.

2.இந்நியமனமானது ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.ஒரு வருட முடிவில் மீள புதுப்பித்தலுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

3.நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொழிற்றுறை திணைக்களம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கின்ற நிறுவனங்கள் முதலியவற்றினால் தாக்கல் செய்யப் படும் வழக்குகள் தொடர்பாக தமது ஆலோசனைகளை வழங்க வேண்டும். மாநகரசபை சார்பில் இவ்வழக்குகளில் முன்னிலையாதல் வேண்டும்.

4.இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாத கால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

5.சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக தேவைக்கேற்ப அல்லது குறைந்த பட்சம் வாரத்தில் மூன்று நாட்கள் மாநகர சபை அலுவலகத்திற்கு வருகை தந்து சட்ட ஆலோ சனைகளை வழங்குதல் வேண்டும்.

அடிப்படைத் தகைமைகள்

1. உயர்நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து குறைந்தது 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

2. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான விடயங்களில் முன் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகரசபையால் நியமிக்கப்படும் தேர்வு குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ் களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத் தபால் மூலம் "முதல்வர் மாநகர சபை யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 30.11.2018 ஆகும்

கொடுப்பனவு விபரம்

| | |
|---|---|
| நீதிமன்ற அமர்வு ஒன்றிற்கு | ரூ.1250.00 |
| எழுத்து மூல சமர்ப்பணம் ஒன்றிற்கு | ரூ.7000.00 |
| ஆட்சேபனை சத்தியகூற்று விபரக்கூற்று ஒன்றிற்கு | ரூ.7000.00 |
| வழக்குக்கான பிராது | ரூ.7000.00 |
| மறுமொழி ஒன்றிற்கு | ரூ.7000.00 |
| மனு ஒன்றிற்கு | ரூ.7000.00 |

மாநகர சபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
07.11.2018

இம்மானுவல் ஆனல்ட்
மாநகர முதல்வர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா PR உடைய 1988.10.21 இல் சதயநட்சத்திரம், கும்பராசியில் பிறந்த கிரகபாவம் 61.(வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்) உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணமுடைய அழகிய படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மணமகன் கொழும்பில் உள்ளார்)

தொடர்பு:- 077 978 0205

(கங்கை) (6329)

## அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

# சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது சங்க கிளைக்குழு தேர்தலுக்காக 30.09.2018 இல் மூடப்பட்ட அங்கத்தவர் பெயர் விபரமடங்கிய வாக்காளர் பட்டியல்கள் 08.11.2018 தொடக்கம் 23.11.2018 வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வரும் எமது விற்பனை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| கிளை இல | காட்சிப்படுத்தும் விற்பனை நிலையங்கள் |
|---|---|
| 01 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி அளவெட்டி |
| 02 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி அளவெட்டி |
| 03 | கிளை 7 அளவெட்டி தெற்கு அளவெட்டி |
| 04 | கிளை 4 முதலியார் கோயிலடி அளவெட்டி வடக்கு |
| 05 | கிளை 4 முதலியார் கோயிலடி அளவெட்டி வடக்கு |
| 06 | கிளை 14 கும்பலை அளவெட்டி கிழக்கு |
| 07 | கிளை 7 அளவெட்டி தெற்கு அளவெட்டி |
| 08 | கோப்சிற்றி கே.கே.எஸ். வீதி மல்லாகம் |
| 09 | கிளை 9 கல்லாரை மல்லாகம் |
| 10 | கிளை 10 குளமங்கால் மல்லாகம் |
| 11 | கிளை 7 அளவெட்டி தெற்கு அளவெட்டி |
| 12 | கிளை 12 நீதிமன்ற வீதி மல்லாகம் |
| 9A | கிளை 9 கல்லாரை மல்லாகம் |

கிளி/அள.மல் அங்கத்தவர்கள் - கிளை 1 கூட்டுறவாளர் வீதி அளவெட்டி

வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களில் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் தங்கள் பெயர் இடம்பெறாதிருப்பின் அவை பற்றிய விபரங்களையும் 23.11.2018 இற்கு முன்னர் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் (இ-4364) செயலாளர்

# வவுனியாவில் தொடர் கனமழை; 05 வீடுகள் சேதம்; 21 பேர் பாதிப்பு

## தேசிய அனர்த்த சேவைகள் நிலைய இணைப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர்மழை காரணமாக 5 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், 21 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட தேசிய அனர்த்த சேவைகள் நிலைய இணைப்பாளர் பி.தனராஜ் தெரிவித்துள்ளார்.**

சீரற்ற காலநிலை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில்கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதுடன், சீரற்ற காலநிலை தொடர்கின்றது.

இதன் காரணமாக வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகா இலுப்பைக் குளம் பகுதியில் 04 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 18 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நந்திமித்திர கிராமத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 3 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இதனடிப்படையில் இதுவரை 05 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 21 பேர் பாதிப்படைந்துள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் எதிர்வரும் நாட்களில் பாதிப்புக்கள் அதிகரிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (2-250)

# கள்ளியடியில் நெற்பயிரை மூடி வெள்ளநீர் பாய்கின்றது

## விவசாயிகள் கவலை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழையையடுத்து வயல் நிலையங்களில் நெற்பயிரை மூடி வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு கள்ளியடிப் பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் காலபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் வயல் நிலங்களை மூடி கடல் நோக்கி வெள்ள நீர் பாய்கின்றது. தாம் மேற்கொண்ட வயல் செய்கையானது இம்முறை அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அப்பகுதி வெள்ளக்காடாக காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

வன்னி வலம்

# கிளிநொச்சியில் பெய்த கனமழையையடுத்து குளங்களின் நீர்மட்டம் சடுதியாக அதிகரிப்பு

## கனகாம்பிகைக்குளம் வான் பாய்கின்றது









(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கடந்த சில தினங்களாக பெய்த பலத்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து குளங்களின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்து காணப்படுகின்றது.

கிளிநொச்சியில் பாரிய நீர்ப்பாசனக் குளங்கள் நான்கும் இடைநிலை நீர்ப்பாசனக் குளங்கள் ஐந்தும் உள்ள நிலையில் திடீர் நீர்மட்டம் அதிகரிப்பினால் இடைநிலை நீர்ப்பாசனக் குளங்களான கனகாம்பிகை குளம்,வன்னேரிக்குளம்என்பன வான் பாய்கின்றன.

காலநிலை இவ்வாறு தொடருமாகில் கிளிநொச்சியில் உள்ள மீதி ஏழு குளங்களும் வான் பாயும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இதன்படி இரணைமடுக்குளம் 26 அடி6 அங்குலமாகவும், அக்கராயன் குளம் 19 அடி 4 அங்குல மாகவும் கல்மடுக்குளம் 23 அடி4அங்குலமாகவும் கரியாலை நாகபடுவான் குளம் 4 அடி 01 அங்குலமாகவும்முறிப்புக் குளம் 15அடி 5 அங்குலமாகவும் பிரமந்தனாறுக்குளம் 11 அடியாகவும் குடமுருட்டிக் குளம் 05 அடி 01 அங்குலமாகவும் வன்னேரிக்குளம் 10 அடியாகவும் உயர்ந்துள்ளது.

இந்நிலையில் கிளிநொச்சி கனகாம்பிகை குளம் வான் பாய்ந்து வருகின்றமையால் கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கும்மற்றும்இரத்தினபுரம்ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் சிலவற்றினுள் வெள்ளம் உட்சென்றுள்ளது. அதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த பகுதியில் வெள்ளத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பில்கிளிநொச்சியில் உள்ள 7 ஆவது காலாற்படையினரால் 11 குடும்பங்களை சேர்ந்த 57 பேருக்கான உடனடி உணவுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறுவர்கள், பெண்கள், முதியோர் தொடர்பில் அவர்களை மீட்பதற்காக விரைந்த படையினர், குறித்த குடும்பங்களிற்கான உடனடி உணவுகளையும் வழங்கினர்.

இதேவேளை குறித்த பிரதேசங்களில் உள்ள குடும்பங்களை சேர்ந்த சுமார் 200 பேருக்கான மதிய உணவு, குடிநீர், மற்றும் பிஸ்கட் வகைகளை கரைச்சி பிரதேச சபை உறுப்பினரான தாமோதரம்பிள்ளை ரஜனிகாந் வழங்கினார்.

குறித்த பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக வெள்ளத்தால் தாம் பாதிக்கப்படுவதாகவும், முறையான வடிகான் வசதி இன்மையால்இவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முறையான திட்டமொன்றை வகுத்து தருமாறும் மக்கள் கோருகின்றனர். மக்கள் உணவு, குடிநீர் உள்ளிட்டவற்றுக்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்வ தாக வும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த இரண்டு வருடங்களின் பின் கிளிநொச்சி இரணைமடுகுளத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளவை அடைந்து வருகிறது என கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் ந. சுதாகரன் தெரிவித்துள்ளார்.

மாங்குளம், கனகராயன் குளம், சேமமடுகுளம் போன்ற குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. எனவே அக் குளங்கள் வான்பாய்கின்ற போதும் இரணைமடு குளத்திற்கான நீர் வரத்து மேலும் அதிகரிக்கும்.

கடந்த வருடங்களில் நீர் மட்டம் அதன் கொள்ளளவை அடையவில்லை. 2016 ஆம் ஆண்டு நீர் மட்டம் 20 அடியாகவும், 2017 ஆம் ஆண்டு 18 அடியாகவும் காணப்பட்டது.

இரணைமடுகுளம் இதுவரை காலமும் 34 அடியாக காணப்பட்டது. தற்போது அபிவிருத்திக்கு பின் 36 அடியாக காணப்படுகிறது. எனவே இரணைமடுகுளம் இவ்வருடம் 36 அடி நீரை எட்டும் என்றும் தெரிவித்தார். (2-315-312)

# கரைச்சி பிரதேச சமுர்த்தி சந்தை

(கிளிநொச்சி)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் கரைச்சி பிரதேச சமுர்த்தி சந்தை ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 42 கிராமங்களை சேர்ந்த விற்பனையாளர்கள்,உற்பத்தியாளர்கள் ஆகியோர் சந்தையில் கலந்து கொண்டிருந்தனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் கலந்து கொண்டிருந்தார். பெருமளவான பொது மக்கள் கலந்து கொண்டு உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-272)

# கிளி/மத்திய ம.வி. பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கிளி/மத்திய மகா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில்நடைபெறும்.

பாடசாலை அதிபர் மு.இரவீந்திரன் தலைமைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீடாதிபதி டாக்டர் சிவமதி சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் நா.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவவிருந்தினர்களாக முன்னாள் அதிபர் கா.சந்திரபாலன், பழைய மாணவர் வைத்திய கலாநிதி இ.சதானந்தன்ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (2)

# 35 வருடங்களின் பின் புனரமைக்கப்பட்ட நித்தகைக்குளம் நேற்று உடைப்பெடுப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள குமுழமுனை கிழக்கில் அமைந்துள்ள நித்தகைக்குளம் நேற்றுக்காலை உடைப்பெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2018ஆம் ஆண்டின் மாகாண நீர்ப்பாசன அமைச்சின் நிதியுதவியில் கடந்த 35 வருடங்களுக்கு பின்னர் இந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்ட குளமே கடந்தசில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளது. குறித்த குளத்தில் 13அடி நீர் கொள்ளளவு செய்யக் கூடியதாக இருந்துள்ளது.

இந்நிலையில் கடும் மழை காரணமாக இக்குளத்தில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் அதனை அண்டிய விவசாய வயல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகளின் உடைமைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

எனினும் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை என்றும் குளத்திற்கு அருகிலுள்ள கிராமங்களிலுள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமரவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாயாறு கடற்பரப்பின் நீர்மட்டம் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

எனவே இப்பகுதியை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (2)

# சிறுபோக செய்கை வழமையை விட மேலதிகமாக 12 ஆயிரத்து 500 ஏக்கரில் இம்முறை செய்ய முடியும்

## கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சியில் எதிர்வரும் சிறுபோக நெற்செய்கையானது வழமையைவிட மேலதிகமாக 12 ஆயிரத்து 500 ஏக்கரில் செய்ய முடியும் என கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி நிலைமைகள் தொடர்பில் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் பாரிய அபிவிருத்தியின் பின்னர் குறிப்பாக 2017.2018 காலப் பகுதியில் குளத்தின் நீர்மட்டம்முழுமையடையவில்லை. ஆனால் இம்முறை அதிகமான மழை வீழ்ச்சி, தொடர் மழை என்பவற்றால் இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் முழுமையடையும் வாய்ப்பு அதிகமாகவேயுள்ளது.

இது விவசாயிகளுக்கு மட்டுமல்ல. எமது திணைகளத்திற்கும் மகிழ்ச்சியான செய்தியாகும். நீர்மட்டம் உயர்வடைந்து முழுமையடையும் சந்தர்ப்பத்தில் எதிர்வரும் சிறுபோகத்திற்கு வழமையான சிறுபோகக் காணிகளை விட மேலதிகமாக சுமார் 12 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்

அத்துடன், இம் மாதம் தொடர் மழை பெய்யக் கூடிய வாய்ப்புக்கள் உள்ள நிலையில் கிளிநொச்சியிலுள்ள அனைத்துக் குளங்களும் வான் பாய்வதற்கான சந்தர்ப்பம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தா.(2-312)

வன்னி வலம்

# நாகர் இலுப்பைக்குளம் பகுதியில் வீதிக்கு வந்த முதலையால் பதற்றம்



(குருமன்காடு)

வவுனியா, நாகர் இலுப்பைக்குளம் பகுதியில் வீதிக்கு வந்த 12 அடி நீளமான முதலையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

நாகர் இலுப்பைக்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள் நேற்றுக்காலை வீதியில் பயணித்த போது 12 அடி நீளமான முதலை ஒன்றை அவதானித்துள்ளனர். இதனையடுத்து பதற்றமடைந்த மக்கள் முதலையை விரட்ட அவ்விடத்தில் கூடிய போது முதலை வீதியோரத்தில் இருந்த சிறிய 'பற்றைக்குள் நுழைந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது.

இதனையடுத்து ஊர் மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்தனர் அவர்கள் முதலையை மீட்டு பாதுகாப்பான இடத்தில் விடுவதற்காக எடுத்துச் சென்றனர். (2-250)



இந்து மக்களின் முக்கிய விரதத்தில் ஒன்றான கேதாரகௌரிவிரதம் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்றபோது...

# மழைகால முன்னாயத்தக் கூட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச சபையில்

(பனிக்கன்குளம்)

வடகீழ் பருவபெயர்ச்சி மழைகால முன்னாயத்தக் கூட்டம் ஒன்று ஒட்டுசட்டான் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் காலத்தில் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழைகால முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எவ்வாறான முன்னாயத்தம் செய்யப்படவேண்டும் என்ற முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் றமேஸ் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த முன்னாயத்த கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்து நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

இதன்போது அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரி மணிமாறன், ஒட்டுசுட்டான் பிரதேச கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச . சபை அதிகாரி, தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகள், உள்ளிட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நிறுவனத்தின் தலைவர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்சீவன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சுதர்சன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் (2)

# பூநகரி வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகள் கடந்த இரண்டு வருடங்களாக முடக்கம்

(பூநகரி)

பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் மட்டும் 40 இற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இயங்கிவரும் நிலையில் இரண்டு வருடத்துக்கு முன்பாக போர்க்கால சூழ்நிலையில் சிறப்புற இயங்கிய பூநகரி வர்த்தக சங்கம் கடந்த இரு வருடமாக தனது செயற்பாடு முன்னெடுக்காத நிலையில் இருப்பதால் தமது குறைபாடுகளை வாடிக்கையாளர்களின் நலன்களை கவனிக்கப்படாத நிலை இருப்பதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் வர்த்தகர்கள் மத்தியில் ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் அற்ற நிலை காணப்படுவதால் பிரதேச சபை நிர்வாகமோ பிரதேச செயலகமோ சுகாதாரப் பகுதியினரோ உரிய நடவடிக்கை எடுத்து பூநகரி வர்த்தக சங்கத்தை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வர்த்தகர்களும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-84)

# பிரதேச பண்பாட்டு விழா

(பூநகரி)

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகமும் பூநகரி பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேச பண்பாட்டு விழா எதிர்வரும் 15.11.2018 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பூநகரி கிராஞ்சி கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச செயலரும் பூநகரி கலாசாரப் பேரவை தலைவருமான சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலர் அஞ்சலிதேவி சாந்தசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் வருடம் தோறும் வெளியிடப்படும் "பூந்துணர்" நறவம் 8 ஆவது சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

இவ்வரங்கில் நாட்டிய நாடகம், குழு நடனம், பேச்சு, கவிதை, பண்ணிசை என்பனவும் இடம்பெறவுள்ளதுடன் கலைத்தொண்டாற்றிய மூவருக்கு "கலைநகரி" விருது வழங்கலும் இடம்பெறுமென கலாசார பேரவையினால் அறிவிக்கப்படுகின்றது.(2-84)

# மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு விழாவும் ஓய்வூதியர் தினமும்



(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர்கள் நன் மதிப்பு விழாவும் ஓய்வூதியர் தினமும் கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபத்தில் மாவட்ட ஓய்வூதியர் சங்க தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில்,

ஓய்வூதியர்கள் 60 வயதைத் தாண்டியதும் தாம் வகித்த பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார்களே தவிர வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறவில்லை.

அவர்களில் பலர் நல்ல திடகாத்திரத்துடன் இருந்து எமது சமூகத்திற்கு பல அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவதை நான் காணும் போது சந்தோசமடைகின்றேன். நானும் ஒருநாள் உங்களைப்போல் ஓய்வூதியனாக வரும் நாள் வரும். ஆகவே அரச பணியில் இருப்போர் அனைவரும் ஓய்வூதியர்களையும் முதியோரையும் மதித்து வாழப் பழகுவதும் மிகவும் முக்கியம் என்றார்.

நிகழ்வின் இறுதியில் பூநகரி, பளை, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூத்த ஓய்வூதியர்கள் 25 இற்கு மேற்பட்டோர் பொன்னாடை போர்த்தி மாலை சூட்டி பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். (2-84)

## மின் விளக்குகள் பொருத்தப்படாமையால்

# இரவு வேளைகளில் இருளில் மூழ்கும் பூநகரி நகர்ப்பகுதி

(பூநகரி)


பத்துக்கு மேற்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் 40 இற்கு மேற்பட்ட கடைத்தொகுதிகளும் உடைய பூநகரி நகர்ப்பகுதி இரவு நேரத்தில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இரவு வேளைகளில்நகர்ப் பகுதியால் பயணம் செய்யும் பாதசாரிகள் அச்சத்துடன் பயணிக்கும் நிலை இருப்பதாக பூநகரி மத்திய சனசமூக நிலைய நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் நகர்ப்பகுதியில் மின் விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மழைத்துளி மழைத்துளி மண்ணில் சங்கமம்...




roof Catchment

எமது அன்றாட வாழ்க்கையில் நீரின் முக்கியத்துவம் பற்றி எமது அனுபவத்தின் வாயிலாகவே நன்கு அறிவோம். காலையில் எழுந்ததிலிருந்து நித்திரைக்குச் செல்லும்வரை நீர் இல்லாத சூழ்நிலையைக் கற்பனை செய்யக் கூட முடியவில்லை. நீருக்கான மூல வளம் மழை. மழை என்றதுமே எல்லோருக்கும் ஒரு மகிழ்ச்சி எழுவது இயல்புதான். சிறுவர் பாடல் தொடங்கி சினிமாப் பாடல் ஈறாக மழை ஒரு பிரதான இடத்தைப் பிடித்து வைத்தி ருக்கின்றது என்றால் மிகை ஆகாது.

**"விசும்பின் துளி வீழின்**
**அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலை காண்பதரிது".**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க மழை பூமியில் உயிரினங்களின் நிலவுகைக்கு இன்றியமையாதது. மழை நீரை வினைத்திறனாக சேகரித்தாலே எமது அன்றாட நீர்த்தேவையில் பெரும் பங்கை நிறைவேற்றிக் கொள்ள முடியும். மழை நீரைச் சேகரிக்கும் முறை தொன்றுதொட்டே காணப்படுகின்றது. புராதன காலத்திலிருந்தே மன்னர்கள் குளங்களை நிர்மாணிப்பதன் மூலம் நீர்ப்பாசனத்திற்கு உறுதுணையாக விளங்கினார்கள். எமது நாட்டைக் கருதுகின்ற பொழுது அண்ணளவாக 5500 mm ற்கு அதிகமான மழை வீழ்ச்சி மத்திய மலைநாட்டில் பதிவாகியுள்ளது (Disanayaka J.B.2000). உலர் வலயத்தில் சராசரியாக 1500mm மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. இவ்வாறு கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்துகின்றோமா என சிந்தித்தால் பெரும்பாலும் வீணாக செல்கின்ற நீரின் பங்கே அதிகம். இலங்கையில் பண்டைய காலங்களில் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் விவசாய நடவடிக்கைகளுக்காகவும் மழைநீரைச் சேகரிக்கும் முறைமை காணப்பட்டுள்ளது. அதற்காக மரங்களின் தண்டுகளிலிருந்தும் வாழை இலைகள் தென்னோலைகளைப் பயன்படுத்தியும் வீட்டுக் கூரைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட நீரானது பெரிய கொள் கலன்களிலும் பீப்பாய்களிலும் சிறு தாங்கிகளிலும் சேகரிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு சமூகத்திற்கான நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு திட்டம் (Community water supply and sanitation project) மூலம் நாட்டின் இரண்டு மாவட்டங்களில் (பதுளை மற்றும் மாத்தறை) மழை நீர் சேகரிப்பும் ஒரு நீர் விநியோக உத்தியாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்வாயிலாக 5488 mm மழை நீர் சேகரிக்கும் தொகுதிகள் பதுளையிலும் 1089 mm மழைநீர் சேகரிக்கும் தொகுதிகள் மாத்தறையிலும் அமைக்கப்பட்டன.

மழை நீர் சேகரிப்பு முறைகள் பிரதானமாக இரண்டு வழிகளால் மேற்கொள்ளப்படலாம்.

1.மேற்பரப்பில் வழிந்தோடும் நீரைச் சேகரித்தல் (Surface runoff harvesting).

2.உயரமான இடங்களிலிருந்து நீரைச் சேகரித்தல் (Rooftop rain water harvesting).

பொதுவாக உயரமான இடங்கள் எனும் போது வீட்டுக் கூரைகளைக் கருதலாம். அதற்கான சேகரிப்புத் தொகுதியானது பின்வரும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.நீர்ப் பிடிப்புப் பகுதி (Catchments)

2.கடத்தும் பகுதி (Transportation)

3.முதல் நீர்ப் பரிகரிப்புப் பகுதி (First flush)

4. வடிகட்டும் பகுதி (Filter)


பொதுவாக நீர்ப்பிடிப்புப் பகுதியானது (Catchments) திறந்த ஒரு தட்டையான பகுதியாகவோ அல்லது சரிவானதோர் பகுதியாகவோ அமைய வேண்டும். இதுவே மழைநீரை நேரடியாகப் பெறும் பகுதியாகும். அது ஒரு மொட்டை மாடி.வீட்டு முற்றம், திறந்த வெளியாகக் காணப்படலாம்.

சேகரிக்கப்பட்ட நீரைக் கடத்துவதற்காக கடத்தும் தொகுதிகள் இணைக்கப்படுகின்றன. அதற்காக கழி யூதாக் கதிர்களுக்குத் (Ultra violet rays ) தாக்குப் பிடிக்கக் கூடிய குழாய்கள் (ISI HDPE/ PVC Pipes) தேவையான விட்டத்தில் பொருத்தப்பட வேண்டும். இவ்வாறு கடத்தப்பட்ட நீரானது முதல் நீர்ப் பரிகரிப்புப் பகுதியின் (First flush) ஊடகச் செலுத்தப்பட வேண்டும். இங்கே தேவையற்ற மணல் அடைசல்கள் அகற்றப்படுவதோடு நோய் தொற்றும் அபாயமும் குறைக்கப்படுகிறது.

இறுதியாக மழை நீரானது வடிகட்டும் பகுதியூடாகச் செலுத்தப்படுகிறது. இங்கே மிகவும் வினைத்திறனான முறையில் மழைநீரின் கலங்கல்கள், நிறம், நுண்ணுயிர்கள் அகற்றப்படுகின்றன. இங்கே வடிகட்டும் பகுதிகள் கிரவல்கள், மண், நெல்ரன் வலைகளால் ஆக்கப்பட்டிருக்கும். இந்த வடிகட்டும் பகுதியானது மழை நீர்த் தொட்டியைச் சுத்தமாக வைத்திருக்க மிகவும் அவசியமானது.


கீழ்த் தரப்பட்ட படங்கள் பல வகையான வடிகட்டும் தொகுதிகளைக் காட்டுகின்றன.

இன்றைய காலகட்டத்தில் சனத்தொகைப் பெருக்கம், விரைவான நகரமயமாதல், கைத்தொழில்மயமாக்கம், விவசாய நடவடிக்கைகள் காரணமாக நீருக்கான கேள்வி அதிகரிக்கின்றது. இனிவரும் காலங்களில் தங்கத்தின் விலையை விடக் குடிநீரின் விலை அதிகரித்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. இந்நிலையில் மழை நீர் சேகரிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி சற்று ஆராய்வோம்.




மணல், கிரவலைக் கொண்ட வவடிகட்டும் தொகுதி

மணல், கிரவல், கரிக்கட்டை கொண்ட வடிகட்டும் தொகுதி




மணல், கிரவலைக் கொண்ட PVC இல் அமைந்த வவடிகட்டும் தொகுதி

குடிநீரைப் பணம் கொடுத்து வாங்கும் நிலையில் இருக்கும் நாம் அச் செலவின் ஒரு பகுதியையாவது மழைநீர் சேகரிப்பு மூலம் ஈடுசெய்துவிட முடியும். அத்தோடு மட்டுமில்லாமல் இது சூழலுக்கு நேயமான (Environmental friendly) செயன்முறையாகும். இதனால் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. பெருந்தொகைப் பணத்தின் முதலீடுகளின்றி எளிமையான முறையில் கிடைக்கும்பொருட்களைக்கொண்டே செய்துவிட முடியும். ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மழை நீரைப் பெற்று வளரும் தாவரங்கள் குழாய் நீரைப் பெற்று வளரும் தாவரங்களைக் காட்டிலும் அதிக வளர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் காட்டுவதாகக் கண்டறியப் பட்டுள்ளது. மழைகாலங்களில் அதிகளவான நீர் சேர்வதன் காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படுவதைக் கண்டிருக்கி றோம். இந் நீரை ஒழுங்கான முறையில் சேகரிப்போமேயானால் வெள்ளப்பெருக்கு அபாயத்தையும் இயன்றளவு குறைத்துக் கொள்ள முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக மழை மனதிற்கு மகிழ்ச்சியைத் தர வல்லது. அந்த மகிழ்ச்சியோடு பயனுள்ளதோர் காரியத்தையும் முன்னெடுப்போமாக!...

க.கௌதமி
செயன்முறை காட்டுநர்,
விலங்கியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

**புதிர் 215 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

தீபனா கோவிந்தராஜ்
603, கே.கே.எஸ்.வீதி,
மனோகராசந்தி அருகாமை,
யாழ்ப்பாணம்

**புதிர் 215 க்கான கேள்வியும் விடையும்:**

**Chimpanzee குரங்குகளில் எத்தனை சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன?**

**24**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 216

**தும்பி எங்கே முட்டை இடும்?**

புதிர் 216 இற்கான விடைகளை 19.11.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 216**

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்திற்கு "அதிசூரா" விருது உட்பட 16 தேசிய விருதுகள்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியிலுள்ள 281 கலாசார மத்திய நிலையங்களுக்கிடையில் நடத்தப்பட்ட "பிரதீபா தரங்க" நாடக, நாட்டிய, சங்கீத போட்டியில் மொத்தம் 15 விருதுகளைப் பெற்று இலங்கையிலேயே அதிக விருதுகளைப் பெற்ற கலாசார மத்திய நிலையமான சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி திருமதி. பிருந்தா கோகுலனுக்கு "அதிசூரா" என்ற தேசிய விருது மாத்தறை மாவட்ட பலஸ்முல்ல தேசிய பாடசாலையில் நடைபெற்ற தேசிய கலை இலக்கிய விழாவில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. "மனச்சாட்சியின் வழியில்" என்ற நாடகத்திற்கு 11 விருதுகளும் தனிப்பாடல் கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவுகளுக்கு இரண்டு விருதுகளும் கிராமியப் பாடல் கனிஷ்ட பாடல் குழுவிற்கு ஒரு விருதும் கீர்த்தனை ஆண்கள் பிரிவுக்கு ஒரு விருதுமாக மொத்தம் 15 விருதுகளைப் பெற்றது சண்டிலிப்





"மனச் சாட்சியின் வழியில்" விருது பெற்ற நாடகக் குழுவினர்

பாய் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம். இலங்கையிலேயே மிக அதிக விருதுகளைப் பெற்ற கலாசார மத்திய நிலையமாக சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் தெரிவு செய்யப்பட்டது. (இ)

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று


(யாழ்ப்பாணம்)

யாழ். அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் 187 ஆவது நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் டானியல் பூவர் அரங்கில் அதிபர் எம்.சி.சுதாகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) லோ.ஸ்ரனிஸ்லாஸ், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.செந்தீபன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி கல்மடுநகர் கிராமிய சித்த வைத்தியசாலை வைத்திய அதிகாரி பாலன் கஜிதா (பழைய மாணவி) மு/ தென்னியன்குளம் அ.த.க. பாடசாலை ஆசிரியர் செ.செல்வபரன் (பழைய மாணவன்), சமூக நலன் விரும்பி தெ. இராஜேஸ்வரன், கலை வாணி சன சமூக நிலையத் தலைவர் த.பிரதீஸ் (பழைய மாணவன்) ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## அமைச்சர்கள் நியமனம் தொடர்கிறது







(கொழும்பு)

மேலும் இரண்டு புதிய அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இரு புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றனர்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக சமல் ராஜபக்ஷ - சுகாதார போசணை, சுதேச வைத்தியத்துறை அமைச்சராகவும் எஸ்.பி.திஸாநாயக்க - நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதேவேளை, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-7)

## தேசமான்ய விருதில் பெருமைப்பட இனிமேல் எனக்கு எதுவுமில்லை

### மைத்திரியின் நடவடிக்கையால் மனம் வருந்திய நேசையா

(கொழும்பு)

ஜனநாயக கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் முரணாகச் செயற்பட்டு வரும் ஜனாதிபதியிடமிருந்து பெற்ற தேசமான்ய விருதை திருப்பி அனுப்புவதாக ஓய்வுபெற்ற சிவில் அதிகாரியான கலாநிதி தேவநேசன் நேசையா அறிவித்துள்ளார்.



1959ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரச நிர்வாக சேவை அதிகாரியாக முக்கியமான பதவிகளில் இருந்து பணியாற்றிய கலாநிதி தேவநேசன் நேசையா, ஓய்வுபெற்ற பின்னர் சிவில் சமூகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருபவர்.

இலங்கையில் மிகவும் மதிப்புக்குரிய சிவில் சமூகப் பிரதிநிதிகளில் ஒருவரான அவர், வெளிநாட்டிலிருந்து பகிரங்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், "விசுவாசமான ஒரு இலங்கையன் என்ற வகையிலும் தகுதியானவன்என்றுஎன்னைக்கண்டு, 2017 மார்ச்சில் தங்களால் தரப்பட்ட தேசமான்ய விருதைப் பெருமையுடன் பெற்றுக் கொண்டவன் என்ற முறையிலும் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன்.

எமது மகத்தான தேசத்துக்கு நான் செய்திருக்கக் கூடிய சேவைகளுக்கு ஜனாதிபதியிடமிருந்து கிடைத்த அங்கீகாரமாக எனக்கு அளிக்கப்பட்ட தேசமான்ய விருதைக் கொண்டாடுவதற்கு அன்று மூன்று கண்டங்களிலிருந்து எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் நாட்டுக்கு வந்திருந்தார்கள்.

உங்களை முன்கூட்டியே நான் பெரிதாக தெரிந்தவன் அல்ல. ஆனால், நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டபோது எனது குடும்பத்தவர்களும் நண்பர்களும் நானும் பெரு மகிழ்ச்சி அடைந்தோம்.

அந்த மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கடந்த சில நாட்களாக எமது 70 ஆண்டு கால பழைமைவாய்ந்த ஜனநாயகத்தை-அப்பட்டமாக நீங்கள் அவமதித்து முன்னெடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் இல்லாமல் செய்து விட்டன.

நீங்கள் எனக்குத் தந்த தேசமான்ய பதக்கத்தையும் சான்றிதழையும் கவலையுடன் திருப்பித் தருவதை விட வேறு வழி எனக்கு, ஒரு விசுவாசமான தேசப்பற்றுடைய இலங்கையன் என்ற வகையில் தெரியவில்லை.

நான் இப்போது வெளிநாட்டில் இருக்கிறேன். நாடு திரும்பியதும் பதக்கத்தையும் சான்றிதழையும் உங்கள் செயலகத்துக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகளைச் செய்வேன்.

எனது இந்த முடிவு எளிதாகவோ அல்லது அவசரமாகவோ எடுக்கப்பட்ட ஒன்றல்ல. 60 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை சிவில் சேவையில் முதலில் இணைந்து கொண்ட நாளில் இருந்து, நான் வரித்துக் கொண்ட கோட்பாடுகளின் பிரகாரமே செயற்பட்டு வந்திருக்கின்றேன்.

அது எனக்குச் சுமையாக இருந்தாலும் பெருமையுடன் ஏற்றுக்கொண்ட சுமை. எனது நீண்டகால சிவில் சேவையில் எனது விழுமியங்களை விட்டுக்கொடுப்பதற்கு மறுத்த காரணத்தால் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கங்களின் கீழும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கங்களின் கீழும் நான் அடிக்கடி தொல்லைகளுக்குள்ளாக்கப்பட்டிருந்தேன்.

நீங்கள் தந்த தேசமான்ய விருதில் பெருமைப்பட இனிமேலும் எனக்கு எதுவுமில்லை என்பதால், நான் இதுவரை மதித்து வைத்திருந்த பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்புவதைத் தவிர எனக்கு வேறு தெரிவு இருக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கையில் 40 லட்சம் பேர் நீரிழிவு நோயினால் பாதிப்பு

இலங்கையில் மாத்திரம் 40 இலட்சம் வரையிலானோர் நீரிழிவு நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளதாக தெரிவித்துள்ள பேராசிரியர் சந்சந்திரிகா விஜயரட்ண, உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நீரிழிவு நோயைக்கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல் தொடர்பான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் நீரிழிவு நோய்த்தாக்கத்தால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் நீரிழிவு நோயானது பல்வேறுபட்ட நோய்களுக்கு மூல காரணமாகத் திகழ்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அதனடிப்படையில் நோக்கும் போது நீரிழிவு நோயின் காரணமாக கட்டுப்பாடற்ற மற்றும் கண்டறியப்படாத உயர் இரத்த சர்க்கரை, பெரும் மற்றும் சிறிய இரத்த நாளங்களுக்கும் பாரிய சேதம் ஏற்படுகின்றது.

இந்த நிலைமை தொடரும் பட்சத்தில் மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு, கண் பார்வைக் குறைபாடு ஆகியவை ஏற்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

அத்துடன், இலங்கையில் மாத்திரம் 40 இலட்சம் வரையிலானோர் நீரிழிவு நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக தெற்காசிய நாடுகளில் மத்திய வயதினரைத்தாக்கிய இந்த நோய் தற்போது இளம் வயதினரையும், வளர்ந்து வரும் இளம் பருவத்தினரையும் அதிக அளவில் பாதிக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான நிலைக்கு காரணமாக அமைவது ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையாகும். ஆரோக்கியமற்ற முறையை எடுத்துக்கொண்டால் எமது நாளாந்த வாழ்வில் நாம் கடைப்பிடிக்கும் உணவுப்பழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடாமை ஆகியவற்றின் மூலமே இவ்வாறான நிலை தோன்றுகின்றது.

அவை தவிர,புகையிலைப் பாவனை, மதுபானபாவனை என்பன நீரிழிவு நோயின் தாக்கத்தை அதிகரிக்கும் வண்ணம் அமைகின்றன. ஆகவே, மேற்படி நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த அனைவரும் முன்வந்து செயற்பட வேண்டும். அத்துடன் குறித்த நோய் தொடர்பில் கவனம் செலுத்தாது அலட்சியம்செய்வதன் ஊடாக பாரிய சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

ஆகவே, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தல், சுய ஆரோக்கியத்தை பராமரித்தலின் மூலம் நீரிழிவு நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்தக் கூடியதாக அமையும். அந்த வகையில் நவம்பர் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தால் பல்வேறு விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## பணமதிப்பு நீக்கம்

## பிரதமர் மோடி நிகழ்த்திய பேரழிவை மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்

## காங்கிரஸ் விளாசல்



(டில்லி)

பணமதிப்பு நீக்க நடவடிக்கை மூலம் மோடி நிகழ்த்திய பேரழிவை மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள் என்று காங்கிரஸ் கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா தெரிவித்துள்ளார்.

பழைய 500 ரூபாய் மற்றும் 1,000 ரூபாய் தாள் செல்லாது என பிரதமர் மோடி 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி அறிவித்தார். நள்ளிரவில் வெளியான இந்த அறிவிப்பு, நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட ரூபாய் தாள்களை வங்கிகளில் மாற்ற 50 நாட்கள் அவகாசம் தரப்பட்டது. அப்போது வங்கிகளில் டெபாசிட் செய்ய முடியாமலும், ஏடிஎம்களில் புதிய ரூபாய் நோட்டுகளை எடுக்க முடியாமலும் ஏராளமானோர் அவதிப்பட்டனர். இந்தியா முழுவதும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் பணமதிப்பு நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நேற்றுடன் 2 ஆண்டுகள் நிறைவடைகிறது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில் "ரூபாய் நோட்டு மதிப்பு நீக்க நடவடிக்கை மூலம் மோடி பேரழிவை நிகழ்த்தியதை இந்திய மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள். தங்களின் துயரத்துக்குப் பழிவாங்க தேர்தலில் பா.ஜ.கவை புறக்கணிப்பார்கள்.

சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய ஊழல் ரூபாய் மதிப்பு நீக்க நடவடிக்கை. கறுப்புப் பணத்தை வெள்ளையாக்க உருவாக்கப்பட்ட திட்டம். இதில் எந்தக் கறுப்புப் பணமும் கிடைக்கவில்லை.

பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் இரண்டாம் ஆண்டு தினமா இன்று. துன்பத்தையும் வேதனையையும் கொடுத்த பிரதமர் மோடிக்குப் பாடம் கற்பிக்க இதுவே சரியான நேரம். ரூபாய் மதிப்பு நீக்க ஊழல் மற்றும் பொருளாதார இழப்பை விசாரிக்க இதுவே சரியான தருணம். எதையும் மறக்க மாட்டோம்" என்று தெரிவித்துள்ளார். (7)

## சிம்பாவேயில்

## 50 பேர் உ

(ஹராரே)

சிம்பாவே நாட்டில் எதிர் எதிரே வந்த 2 பேருந் துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாவேயின் தலைநகரான ஹராரேயில் இருந்து ருசாபே நகருக்கு செல்லும் வீதியில், எதிர் எதிரே வந்த இரண்டு பேருந்



## அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் இடம்பெற்ற முதல் அகதிப் பெண்

(வோஷிங்டன்)

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் முதல் முறையாக ஆப்கானிலிருந்து அமெரிக்காவுக்கு குடியேறிய (அகதி) பெண் ஒருவர் இடம்பெற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத் தேர்தல் நடத்து முடிந்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் உள்ள செனட் (100 உறுப்பினர்கள்) மற்றும் பிரதிநிதிகள் சபைக்கு (435 உறுப்பினர்கள்) தேர்தல் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பதவிக்காலம் முடிவடைந்த பிரதிநிதிகள் சபைக்கும், செனட்டின் 435 உறுப்பினர்கள் பதவிக்கும், 36 ஆளுநர் பதவிக்கும் தேர்தல் நடந்து முடிந்தது. இதில் பிரதிநிதிகள் சபையை ஜனநாயக்க் கட்சி கைப்பற்றியது.

இந்த நிலையில் பிரதிநிதி சபைக்கான தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர், டென்னிஸ்ஸை தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறார் சபியா யாசிர். இவர் ஆப்கானிஸ்தனை பூர்வீகமாகக் கொண்டு அமெரிக்காவில் குடியேறிய முஸ்லிம் பெண். (சபியா யாசிரின் குடும்பம் ஆப்கானில் தீவிரவாதிகளால் மிகுந்த துன்புறுத்தலுக்கு உள்ளாகியது குறிப்பிடத்தக்கது).

27 வயதான சபியா யாசிர் பிரதிநிதிகள் சபையில் இடம்பெறும் முதல் அகதி என்ற பெருமைக்கு உரியவராகி இருக்கிறார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சபியா வெற்றிபெற்றது குறித்து முதல் முறையாக தனது வாக்கைப் பதிவு செய்த இளைஞர் கோபல் கூறும்போது, "சிறுபான்மையினர்கள் முன்னோக்கிச் செல்வது மகிழ்ச்சியாக உள்ளது. அவர்கள் பல துன்பங்களைக் கடந்து இங்கு வந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது அவர்கள் விரும்புவதைப் பெறும் சூழல் உருவாகியுள்ளது" எனத் தெரிவித்தார். (7)

## பா…

## இ…



(இ…

பாகி…

விடுதல…

நெதர்ல…

டுவதாக…

பாகி…

கில் மர…

கிறிஸ்…

(வயது-…

மாதம் 3…

இந்த தீ…

கள் மற்…

## நாட்டில் நடப்பதை சினிமாவில் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை



(ஈரோடு)

நாட்டில் நடப்பதை சினிமாவில் கூறுவதில் எந்த தவறும் இல்லை என்றும் இதற்காக அந்த படத்துக்கு நெருக்கடி கொடுப்பது சரியில்லை என்றும் வைகோ தெரிவித்தார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்றைய தினம் ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

1950ஆம் ஆண்டில் இருந்தே பராசக்தி, ஓர் இரவு ஆகிய படங்களில் சீர்திருத்த கருத்துக்கள் சொல்லப்பட்டு தான் வருகிறது.

கருத்து சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. தனிப்பட்ட ஒருவரைதான் விமர்சிக்கக்கூடாது.

விஜய் நடித்த சர்கார் படத்தில் அரசுக்கு எதிரான கருத்துக்கள் இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

இதற்காக அந்த படத்துக்கு ஆளுங்கட்சி தரப்பில் எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நடப்பதை சினிமாவில் கூறுவதில் எந்த தவறும் இல்லை. இதற்காக அந்த படத்துக்கு நெருக்கடி கொடுப்பதும்என்னைப்பொறுத்தவரை சரியில்லை.



விஜய்பண்பானவர் அனைவரையும் மதிக்கக்கூடியவர் அவரிடம் எனக்கு நல்ல நட்பு உள்ளது. அவர் தனிப்பட்ட ஒருவரை விமர்சித்து இருக்க மாட்டார் எனத் தெரிவித்தார். (7)


## ட்ரம்புடன் வாக்குவாதம்

## ஊடகவியலாளருக்கு வெள்ளைமாளிகையில் நுழைய தற்காலிகமாக அனுமதி ரத்து

(வோஷிங்டன்)

அமெரிக்க இடைத் தேர்தல் முடிவுகளை அடுத்து நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது ட்ரம்ப் உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சிஎன்என் செய்தியாளரின் ஊடகவியலாளருக்கான அனுமதி அட்டை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகை பெண் உதவியாளரிடம் அநாகரிகமாக நடந்துகொண்டதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத் தேர்தல் நடந்து முடிந்தது.

இதில் பிரதிநிதிகளுக்கான இடைத் தேர்தலில் ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சி சரிவைச் சந்தித்தது.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்தார் ட்ரம்ப்.

அப்போது சிஎன்என் செய்தியாளர் அகோஸ்டா, லத்தீன் அமெரிக்காவில் இருந்து தெற்கு அமெரிக்க எல்லைக்கு இடம்பெயரும் அகதிகள் குறித்துக் கேள்வி எழுப்பினார்.

அதைத் தொடர்ந்து மற்றொரு கேள்வியைக் கேட்ட அகோஸ்டாவிடம், "இத்தோடு போதும்" என்று ட்ரம்ப் இடைமறித்தார்.

உடனே வெள்ளை மாளிகையில் இருந்த பெண் உதவியாளர் அகோஸ்டாவிடம் இருந்து மைக்கைப் பறிக்க முயன்றார். ஆனால் மைக்கைத் தராமல் அவரைத் தடுத்தார் அகோஸ்டா. அப்போது அகோஸ்டாவின் கை, பெண்ணின் முழங்கையில் பட்டது. அப்போது, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் மேம்" என்று தெரிவித்தார் அகோஸ்டா.

இதைத் தொடர்ந்து என்பிசி செய்தியாளர் பீட்டர் அலெக்ஸாண்டர், அகோஸ்டாவுக்கு ஆதரவாகப் பேச முயன்றார். அவரையும் இடைமறித்த ட்ரம்ப், "நீங்கள் முரட்டுத்தனமான, கொடூரமான நபர்" என்று சாடினார். (7)

## வெள்ளை மாளிகையில் கொண்டாட்டத்தை நிராகரி…

(வோஷிங்டன்)

15 ஆண்டுகளாக அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடைபெற்று வந்த தீபாவளிக் கொண்டாட்டங்கள் இந்த ஆண்டு நிராகரிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்க வாழ் இந்திய மக்களின் கோரிக்கையை ஏற்றுகடந்த 2003ஆம்ஆண்டு இருந்த ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடும் வழக்கத்தை அறிமுகப்படுத்தினார்.

பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஒபாமாவும் அந்த வழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்தார்.

இந்நிலையில் கடந்த 15 ஆண்டுகளாக வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தீபாவளிக் கொண்டாட்டங்கள் இந்த ஆண்டு நடைபெறவில்லை. கடந்த ஆண்டு வெள்ளை மாளிகையில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் நடைபெற்ற நிலையில் அதில்



ஜனாதி…

இந்…

ட்டங்கள்…

மன்ற …

ரம், வா…

காரண…




# ல் கோர விபத்து உயிரிழப்பு!



துகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து வந்து விபத்தில் சிக்கியவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பொலிஸ் அதிகாரி பால் நியாதி, இந்த விபத்தில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், பலர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (7)

# பூட்டான் புதிய பிரதமராக லோட்டே ஷெரிங் பதவியேற்பு



(திம்பு)

பூட்டான் நாட்டின் புதிய பிரதமராக லோட்டே ஷெரிங் பதவியேற்றுள்ளார்.

இந்தியாவின் அயல்நாடான பூட்டானில் கடந்த செப்டெம்பர் மாதம் முதல் சுற்று பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. அதில் பிரதமர் ஷெரிங் தோபே தலைமையிலான ஆளும் மக்கள் ஜனநாயக கட்சி, டி.என்.டி மற்றும் டி.பி.டி. ஆகிய கட்சிகள் மோதின.

வாக்கு எண்ணிக்கையில் டி.என்.டி. கட்சி 92,722 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. அதற்கு அடுத்தபடியாக டி.பி.டி. கட்சி 2ஆவது இடம் பிடித்துள்ளது. பிரதமர் தோபேவின் ஆளும் பி.டி.பி. (மக்கள் ஜனநாயக கட்சி) படுதோல்வி அடைந்து 3ஆவது இடத்தை பிடித்தது.

பூட்டான் அரசியல் சட்டப்படி முதல் சுற்று தேர்தலில் முதல் 2 இடங்களை பிடிக்கும் கட்சிகளுக்கு இடையே 2 ஆவது சுற்று போட்டி நடைபெறும். அதில் வெற்றி பெறும் கட்சியே ஆட்சி அமைக்கும்.

அதன்படி கடந்த ஐப்பசி 18 ஆம் திகதி 2ஆவது சுற்று தேர்தல் நடைபெற்றது. இதில் டி.என்.டி. மற்றும் டி.பி.டி. கட்சிகள் பலப்பரீட்சை நடத்தின.

இதில் மொத்தம் உள்ள 47 தொகுதிகளில் 30 தொகுதிகளை டிஎன்டி கட்சி கைப்பற்றியது. இதையடுத்து அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர் லோட்டே ஷெரிங் பிரதமராக நேற்று முன்தினம் பதவியேற்றார். அவருக்கு பூட்டான் மன்னர் ஜிக்மே கேஷர் நாம்கியேல் வாங்சக் பாரம்பரிய முறைப்படி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். (7)

# பாகிஸ்தான் சிறையிலிருந்து ஆசியா பீவி விடுதலை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட ஆசியா பீவி நெதர்லாந்துக்கு அழைத்துச் செல்லப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானில் மதநிந்தனை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கிறிஸ்தவ பெண் ஆசியா பீவியை (வயது-47) உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் 31ஆம் திகதி விடுதலை செய்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து அரசியல் கட்சிகள் மற்றும் மதவாத அமைப்புகள் நாடு முழுவதும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டன. வீதிகளில் தடை அமைத்தும், டயர்களை கொளுத்தியும் அந்த அமைப்புகள் நடத்திய போராட்டத்தால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

தீவிர மதப்பற்றாளர்கள் பலர், ஆசியாவுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். ஆசியா பீவியின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால், அவர் நாட்டை விட்டு வெளியேற வாய்ப்பு உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

மறு ஆய்வு மனு மீதான தீர்ப்பு வெளியாகும்வரை ஆசியா பீவியை நாட்டை விட்டு செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று அரசு தரப்பில் உறுதி அளிக்கப்பட்டதை அடுத்து, தெஹ்ரீ- இ- லப்பாயிக் பாகிஸ்தான் (டிஎல்பி) கட்சி போராட்டத்தை திரும்ப பெற்றது. முக்கிய கட்சியான டிஎல்பி போராட்டத்தைக் கைவிட்டதால் பாகிஸ்தானில் இயல்பு நிலை திரும்பியது.

இந்த நிலையில், வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு பிறகு முல்தானில் உள்ள பெண்கள் சிறையில் இருந்து ஆசியா பீவி விடுவிக்கப்பட்டார்.

ராவல்பிண்டியில் உள்ள நூர் கான் விமான தளத்துக்கு அழைத்துச் செல்லப்படும் ஆசியா பீவி, அங்கிருந்து நெதர்லாந்து அழைத்துச் செல்லப்பட உள்ளதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. (7)

# வடகொரியா -அமெரிக்கா பேச்சுவார்த்தை இரத்து

(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ, வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சிறப்பு தூதரும், சிரேஷ்ட தலைவருமான கிம் யாங் சோலுடன் நடக்க இருந்த பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும், கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் உச்சி மாநாடு நடத்தி சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பின்போது இரு தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில் கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதங்களை முழுமையாக ஒழிக்க இரு தரப்பிலும் உழைப்பது என உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பகைவர்களாக இருந்து வந்த ட்ரம்ப், கிம் ஜாங் உன் இடையே இணக்கமான நல்லுறவு ஏற்பட்டது.


ஆனால் அணு ஆயுத ஒழிப்பில் வடகொரியா குறிப்பிடத்தக்க அளவில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்கா கடுமையான பொருளாதார தடைகளை விலக்கிக்கொள்ளாத நிலையில், மீண்டும் அணு ஆயுதங்கள் தயாரிக்கிற நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம் என வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சகம் எச்சரித்தது.

இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ நியூயோர்க் நகரில் கிம் ஜாங் உன்னின் சிறப்பு தூதரும், மூத்த தலைவருமான கிம் யாங் சோலுடன் நேற்றைய தினம் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி வோஷிங்டனில் அமெரிக்க வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் ஹெதர் நவார்ட் விடுத்துள்ள அறிக்கையில், "இந்த சந்திப்பு இன்னொரு நாளில் நடைபெறும்" என கூறப்பட்டுள்ளது. (7)

# பில் தீபாவளி கரித்த ட்ரம்ப்



ஜனாதிபதி ட்ரம்ப் பங்கேற்றார்.

இந்த ஆண்டு தீபாவளி கொண்டாட்டங்கள் நடத்தப்படாததற்கு, நாடாளுமன்ற இடைக்கால தேர்தல், பிரசாரம், வாக்கு எண்ணிக்கை போன்றவை காரணமாக தெரிவிக்கப்படுகிறது. (7)

# சிறையில் துப்பாக்கிச்சூடு 20 பேர் உயிரிழப்பு

தஜிகிஸ்தான் சிறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஊடகங்கள் நேற்று வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

தஜிகிஸ்தானின் குஜாந் நகரிலுள்ள சிறைச்சாலையொன்றில் நேற்று கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த மோதலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முகமாக, பாதுகாப்பு படையினர் பாரிய துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

படையினரின் குறித்த கட்டுப்பாட்டு முயற்சியில் 20 பேர் வரை உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளது.

எனினும், குறித்த மோதல் தொடர்பான மேலதிக தகவல்கள் எவையும் அரசாங்க தரப்பில் அறிவிக்கப்படவில்லையென சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (7)

# ட்ரம்பின் விருப்பத்திற்கிணங்கவே நான் இராஜினாமா செய்தேன்

## பதவி விலகிய சட்டத்தரணி ஜெப்செஸ்ஸன்ஸ் டுவிட்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அரசு தலைமை சட்டத்தரணியாக பதவி வகித்த ஜெஃப் செஸ்ஸன்ஸ் டொனால்ட் ட்ரம்பின் வேண்டுகோளுக்கிணங்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



இது தொடர்பான டொனால்ட் ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில், அட்டர்னி ஜெனரல் ஜெஃப் செஷன்ஸின் சேவைக்கு நாங்கள் அவருக்கு நன்றி கூறுகின்றோம். அவரது எதிர்காலத்துக்கு எங்களின் வாழ்த்துக்கள் என பதிவிட்டுள்ளார்.

இது குறித்து தனது இராஜினாமா கடிதத்தில் செஷன்ஸ், பதவி விலகல் முடிவு எனது சொந்த முடிவு அல்ல. (ட்ரம்பின்) வேண்டுகோளினை ஏற்றே நான் எனது இராஜினாமா கடிதத்தை கையளிக்கின்றேன்.

மேலும் நாட்டின் அட்டர்னி ஜெனரலாக நான் பணியாற்றிய காலத்தில் சட்டத்தை நாங்கள் நிலைநிறுத்தியுள்ளோம் அதற்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் எனவும் குறிப்பிட்டார்.

பதவி விலகிய ஜெப் செஷன்ஸுக்கு பதிலாக அப்பொறுப்பில் ஜனாதிபதி தேர்தலில் ரஷ்ய தலையீடு இருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணயை விமர்சித்து வந்த உயர் அரசு அதிகாரியான மேத்யூ விடேகர் தற்காலிகமாக இருப்பார் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


இந் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்ய தலையீடு இருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையில் இருந்து ஜெஃப் செஷன்ஸ் தன்னை விடுவித்து கொண்ட பிறகு அவரை ட்ரம்ப், தொடர்ந்து விமர்சித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# பிரிட்டன் அரசுகளை அங்கீகரிப்பதில்லை

## பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்ட் விளக்கம்

(லண்டன்)

**பிரித்தானியா, நாடுகளை அங்கீகரிக்குமே தவிர, அரசாங்கங்களை அங்கீகரிப்பதில்லை என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரித்தானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார்.**



பிரித்தானியாவின் நிழல் வெளிவிவகார அமைச்சர் எமிலி தோர்ன்பெரி கடந்த திங்கட்கிழமை எழுப்பியிருந்த கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பிய எமிலி தோர்ன் பெரி, பிரதமராக மகிந்த ராஜபக்ஷவையா, ரணில் விக்கிரமசிங்கவையா? பிரித்தானியா ஏற்றுக்கொள்கிறது என்று கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த மார்க் பீல்ட்.

இலங்கையின் அரசியல் நிலவரங்கள் மிகவும் கவலையளிக்கின்றன. நாடுகளை அங்கீகரிக்குமே தவிர, அரசாங்கங்களை பிரித்தானியா அங்கீகரிப்பதில்லை.

அரசியலமைப்பு மதிக்கப்படுவதையும், அரசியல் மற்றும் சட்ட நடைமுறைகள் பின்பற்றப் படுவதையும் உறுதி செய்யுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளோன்.

சபாநாயகருடன் கலந்துரையாடி, நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி, இலங்கை மக்களின் குரலை ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வெளிப்படுத்த வாய்ப்பளிக்குமாறு, கடந்த ஒக்டோபர் 29ஆம் திகதி ஜனாதிபதியைக் கோரும் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டேன்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# "சிறிகொத்தா பாராளுமன்றம் அல்ல சபாநாயகர் புரிந்து கொள்ள வேண்டும்"

## மகிந்த அணி எம்.பி.செஹான் கூறுகிறார்



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய பாராளுமன்றத்தில் நடுநிலையாக செயற்பட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின்தலைமையகமான சிறிகொத்தா அல்ல பாராளுமன்றம் என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்செஹான்சேமசிங்க,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரமே பாராளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் தற்போதைய நெருக்கடியை சபா நாயகர் மேலும் வலுப்படுத்தினால் அவர் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போது பாராளுமன்றத்தில் எவ்வித மான மாற்றங்களும் இடம்பெறவில்லை. கடந்த 26 ஆம் திகதிக்கு முன்னர் எவ்வாறு பாராளுமன்றம் காணப்பட்டதோ அதேபோன்றே செயற்படும் என்று குறிப்பிட்டுள்ளமை ஜனாதிபதியின் தீர்மானத்தினை மீறுவதாகும்.

சபாநாயகர் ஐக்கிய தேசிய கட்சிக்காகவே செயற்படுகின்றார். கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் இதனை நிரூபித்துள்ளார். 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் புதிய அமைச்சரவையின் செயற்பாடுகளே இடம்பெறும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக கொண்டுவரவுள்ளதாக குறிப்பிடப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை பெரும்பான்மையுடன் தோற்கடிப்போம் எனவும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியால் நாடு செயலிழந்துள்ளது நாடாளுமன்றை உடன் கூட்ட வேண்டும்

## மகிந்தவின் சகா குமார வெல்கம காட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் நடவடிக்கையால் நாடு செயலிழந்துள்ளது என சாடியுள்ள மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவான முன்னாள் அமைச்சர் குமார வெல்கம பாராளுமன்றத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன இலங்கையை உலகநாடுகள் மத்தியில் நகைச்சுவைப் பொருளாக்கியுள்ளார் என தெரிவித்துள்ள குமார வெல்கம பிரதமர் யார் என்ற விவகாரத்திற்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வை காண வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

எமது நாடு அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என குறிப்பிட்டுள்ள அவர் அரச அலுவலகங்களில் எவரும் பணிபுரியாத நிலை உருவாகியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



அரச ஊழியர்கள் யார் உண்மையான பிரதமர் எனத் தெரியாமல்தடுமாற்றத்தில் உள்ளனர். மக்கள் குழம்பிப்போயுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருநாடும் எங்களை பார்த்து சிரிக்கின்றது. அலரிமாளிகையில் ஒரு பிரதமர் இருக்கின்றார்.மற்றொரு பிரதமர் பிரதமர் அலுவலகத்தில் இருக்கின்றார். இந்த விடயத்திற்கு நாடாளுமன்றத்தின் மூலம் தீர்வை காண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சிரிப்பு மருந்து

நான் ஒன்று சொல்றேன்!

அதை நீங்க செய்தால் உங்க உடம்புக்கு ரொம்ப நல்லது. நான் சொல்றதை நீங்க செய்தால் உங்க உடம்பில என்னென்ன நடக்கும் தெரியுமா? இதை நான் சொல்லுறது இருக்கட்டும். டாக்டர் சொல்றதைக் கேளுங்க...

சுவாசப்பையில பிராணவாயு அதிகமா நிரம்புது.

உடம்பில இரத்தம் வேகமாகப் பரவுது.

ஈரலையும் வயிற்றுத் தசைகளையும் தட்டி எழுப்புது. தேகப் பயிற்சி செய்யிறபோது உடம்பு தசையெல்லாம் அசைஞ்சு பலப்படுதெல்லே! அதேமாதிரி பலம் சேரும்!

இரத்தத்தில சக்தியைக் குடுக்கிற சக்கரைப் பொருளை பாய்ச்சுது!

ஆகையினாலே இதைவிட சிறந்த "டொனிக்" வேற எதுவும் இல்லை.

எது தெரியுமா? இப்ப நான் சொல்லிக்கொண்டு வந்த இவ்வளவும் உங்களுக்கு வேணுமென்றால் நீங்க வேற ஒண்டும் செய்ய வேண்டாம். வாய்விட்டுச் சிரித்தால் போதும்.

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். அப்படியென்று சொல்லுவார்களே! அது ரொம்பவும் உண்மையென்று டாக்டர்களே சொல்றாங்க! ஆகையினாலே காசில்லாமல் டொனிக் வேணுமென்றால் கலகலென்று சிரிங்க.அது போதும் !

"சிரிக்கிறதுக்கு நாங்க தயார். ஆனா சிரிப்பு வரமாட்டேங்குதே. அதுக்கு நாங்க என்ன செய்யிறது?" இதுதான் பல பேருடைய கேள்வி.

வாழ்க்கையின் உண்மையை புரிஞ்சிக்குங்க .... எதையும் "சீரியஸா" நினைக்கிற பழக்கத்தை இன்றோடு விட்டுடுங்க! வாழ்க்கையை லேசா எடுத்துக்குங்க.வாய்விட்டு சிரிக்கலாம்.

கலைவாணர் அப்படித்தான் இருந்தார்.

நெருக்கடியான நேரம் கூட அவரை நிலை குலைய வச்சதில்லே!

ஒரு தடவை அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் நாகர்கோவிலியிருந்து சென்னைக்கு சொந்த காரிலே வந்து கொண்டு இருக்கிறார்கள்.

வரும் வழியிலே...கோவில்பட்டிக்கு பக்கத்திலேயென்று நினைக்கிறேன் ஒரு பெரிய ஆக்ஸிடென்ட்! வேற யாருக்குமில்லே! அவங்களுக்குத்தான். அவங்க கார் ஒரு புளிய மரத்திலே மோதி அப்படியே தகடா நசுங்கிப்போச்சு. காரிலே இருந்தவர்களுக்கெல்லாம் பலமான காயம்! மெதுவா ஒவ்வொருத்தரா வெளியே எடுத்தாங்க! தேவைப்பட்டவர்களுக்கு முதல் உதவி செய்தார்கள். கட்டெட்லாம் போட்டாங்க!

ஒரு பெட்ஷீட்டை எடுத்து ரோட்டு ஓரமா புல் தரையிலே போட்டு அதிலே உக்காந்திருந்தாங்க...

ஒருத்தரை மட்டும் பக்கத்து டவுனுக்கு அனுப்பி வேறு ஒரு காரை எடுத்துக்கிட்டு வரச் சொல்லியிருக்காங்க! இவங்கள்லாம் உக்காந்து பேசிக்கிட்டிருக்காங்க!

கலைவாணரும் வெத்திலை பெட்டியைத் திறந்து வெத்திலை சீவல் போட்டுக்கிட்டு உக்காந்திருக்கார்.

கார் புளிய மரத்திலே பதிஞ்சு போயிருக்கு!

அந்த நேரத்திலே அந்த வழியாலே போனவங்க இதை பாத்திடுறாங்க ! ஐயையோ ....நம்ம கலைவாணர் மாதிரியில்லே தெரியுது என்று சொல்லிக்கிட்டு பதறிப்போய் கிட்டை ஓடி வர்றாங்க .... "அண்ணே! என்னண்ணே ஆச்சு?" என்று உதறலோட கேக்கிறாங்க...

என்.எஸ்.கிருஷ்ணன் கொஞ்சம்கூட பதறலை. வெத்திலையிலே சுண்ணாம்பு தடவிக்கிட்டே சொல்றாரு! "அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. இப்படி வந்துகிட்டே இருந்தோம்... ரொம்ப களைப்பா இருந்தது...அதுதான் காரை அந்த புளிய மரத்திலே சாத்தி வைச்சுட்டு இப்படி உக்காந்து வெத்தில போட்டுக்கிட்டிருக்கோம்!" என்றார்.

அவரு நிலைமையிலே நாம இருந்தால் அந்த நேரத்திலே அப்படி சொல்லத் தோணுமா யோசிச்சிப் பாருங்க. அவரு வாழ்க்கையை ஒரு சுமையா நினைக்கலே...லேசா நினைச்சார். அதனாலே தான் அவராலே அப்படி சொல்ல முடிஞ்சுது.... கார் நசுங்கி போனதுக்கே அவரு கவலைப்படலே!

கால் செருப்பு வார் அறுந்து போனா நாம எவ்வளவு கவலைப்படுறோம் !

அது தான் நமக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்.

இது வரைக்கும் போனது போகட்டும்...இனி மேலாவது கொஞ்சம் வாய்விட்டு சிரிச்சுப் பார்க்கலாம்.

தினம் ஒரு தடவையாவது அப்படி செய்யுங்க !

ஒரு எச்சரிக்கை ! ரெண்டு மூணு பேரோட சேர்ந்து இருக்கும் போது வாய்விட்டு சத்தம் போட்டு சிரிக்க!

ஆனா.... நீங்க தனியா உக்காந்திருக்கிறப்போ அப்படி சிரிக்காதீங்க!

பாக்கறவங்க சந்தேகப்படுவாங்க!

# பாராளுமன்றத்தை கலைக்கத் திட்டம்

## சரத் பொன்சேகா கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைக்கத் திட்டமிட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ள அதேவேளை முன்னாள் அமைச்சர் சரத்பொன்சேகா இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முயலக்கூடாது என சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அது ஜனநாயக விரோத நடவடிக்கையாக அமையும் என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் இதற்கெதிராக கிளர்ந்தெழுவார்கள் எனவும் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசமைப்பின் கீழ் பாராளுமன்றத்தின் முழுமையான ஆயுட்காலம் பூர்த்தியாகும்வரை அதனை கலைக்க முடியாது என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசாங்கமொன்று அதன் நாலரை வருடகாலத்தை பூர்த்தி செய்யும்வரை அதனைக் கலைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை என்னுடைய பீல்ட்மார்ஷல் பதவியையும் ஜனாதிபதியால் பறிக்க முடியாது எனவும் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

பாதாள உலக குழுவினரின் ஆலோசனையை செவிமடுத்து ஜனாதிபதி என்னுடைய பீல்ட்மார்ஷல் பதவியை பறித்தால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## '10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றம்'

# சபாநாயகர் கருஜெயசூரியவுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு!

(கொழும்பு)

சபாநாயகர் கருஜெயசூரியவுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தேசிய பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத்தினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஏற்றுக்கொண்டு சில தினங்களுக்குள் சபாநாயகர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமைக்கான காரணத்தை விளக்குமாறு முறைப்பாட்டில் உள்ளடக்கியுள்ளதாகவும் பேராசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சங்கத்தின் உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண, சபாநாயகர், அரசியலமைப்பு, சம்பிரதாயம், ஒழுக்கம் என்பவற்றுக்கு எதிராகவும் பெரும்பான்மையான மக்களின் அபிலாஷைக்கு எதிராகவும் செயற்படுவதாக தெரிவித்தார்.

இதேவேளை, 1994, 20 இலஞ்சம் தொடர்பான சட்டத்தின் 70 ஆவது பந்திக்கு அமைய ரணில் விக்கிரமசிங்கவுக்கு பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளதன் மூலம்



கரு ஜெயசூரிய, 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்தை செய்துள்ளதாக திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்விப் பிரிவின் தலைவர் விரிவுரையாளர் ராஜா குணரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# மைத்திரி, கோத்தா கொலைச்சதி விவகாரம் நாலக சில்வாவின் ட்ரோன் கமராவுடனான அதிவிசேட வாகனம் குறித்து விசாரணை

(கொழும்பு)

கொலைச் சதி விவகாரம் குறித்து பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா, ட்ரோன் கமரா உள்ளிட்ட அதிவிசேட வசதிகளைக் கொண்ட வாகனம் ஒன்றினைப் பெற்று அதனை இரகசியமாக பயன்படுத்தியுள்ளதாக பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் நேற்று முன்தினம் நீதிமன்றுக்கு அறிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, சி.ஐ.டியின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரை கொலை செய்ய சதி செய்ததாகக் கூறப்படும் விவகாரம் குறித்த வழக்கு நேற்று முன்தினம் கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே அவர் இதனை அறிவித்தார்.

இது குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது, விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டியின் மனிதப் படுகொலைகள் குறித்த விசாரணை அறை உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்குஹெட்டி, பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் கே.எம்.எம். குமாரசிங்க ஆகியோருடன் மன்றில் மேலதிக விசாரணை அறிக்கையுடன் ஆஜராகியே இதனை பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் வெளிப்படுத்தினார்.

அது குறித்து மேலதிக விசாரணைகள் தொடர்வதாக இதன்போது கூறிய அவர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் கொலைச் சதிக்கு சாட்சிகள் உள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரி - கோத்தா கொலைச் சதி விவகாரம் குறித்து சாட்சிகள் தற்போது வெளிப்படுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த விவகாரம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, விளக்கமறியலில் 2 ஆவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா அதிரடிப் படை, சிறைச்சாலை அதிகாரிகளின் விசேட பாதுகாப்புக்கு மத்தியில் மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது மேலதிக விசாரணை அறிக்கையை பொலிஸார் முன்வைத்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா சார்பில் மன்றில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி அஜித் பத்திரன, தனது சேவைப் பெறுநர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை சட்ட விரோதம் என வாதாடினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் 6,7 ஆம் அத்தியாயங்களைச் சுட்டிக்காட்டி அவர் இந்த வாதங்களை முன்வைத்தார். அத்துடன் சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளவே முடியாத சாட்சிகளை மையப்படுத்தியே தனது சேவைப் பெறுநர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கொலைச் சதி குறித்து அச்சாட்சிகளில் எந்த வெளிப்படுத்தல்களும் இல்லை எனவும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி அஜித் பத்திரன, இந்த சதி எப்போது செய்யப்பட்டது என்பது குறித்த கால எல்லைகூட விசாரணையாளர்களுக்கு தெரியாது என கூறினார்.

அவர்கள் யாரின் தேவைக்காக இவ்வாரு அவசர அவசரமாக நாலக சில்வாவைக் கைது செய்தனர் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். இதனையடுத்து இதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் பதில் வாதத்தை முன்வைத்தார்.

"நாம் ஒருபோதும் நாலகவை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யவில்லை. அவரைக் கைது செய்த பின்னர் பயங்கரவாத தடை சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிட்ட நபர் ஒருவருக்கு எதிராக புரியும் குற்றம் தொடர்பில் காரணிகள் வெளிப்படுத்தப்பட்டன. அதன்படியே அந்த சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது.

எனவே அச்சட்டத்தின் 6,7 ஆம் அத்தியாயங்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவை இல்லை. அத்துடன் இந்த விசாரணை மிக நம்பகரமானது. நாம் நாமல் குமாரவின் முறைப்பாட்டுக்கு அமைய கைது நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை. நாலக சில்வாவிடம் 46 மணி நேரமும் 20 நிமிடங்களும் விசாரணைகளை முன்னெடுத்த பின்னரே கைது செய்தோம்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் கொலை தொடர்பில் தெளிவான சாட்சியங்கள் உள்ளன. ஜனாதிபதி மைத்திரி, கோத்தா கொலைச் சதி தொடர்பில் சாட்சிகள் தற்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலதிக விசாரணைகளை கருத்தில் கொண்டு அவற்றை வெளிப்படுத்த முடியாது என்றார்.

இதன்போது நாலக சில்வா சார்பில் பிணை கோரப்பட்டதால், முதலில் இந்த நீதிமன்றுக்கு பிணை வழங்கும் அதிகாரம் இந்த வழக்கை பொறுத்தவரை உள்ளதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க இரு தரப்பினருக்கும் எழுத்து மூல சமர்ப்பணங்களை மன்றில் முன்வைக்க நீதவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டார்.

அதுவரை அதாவது எதிர்வரும் 21 ஆம் திகதிவரை பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இதன்போது மேலதிக விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றில் முன்வைத்தார்.

அதில், பிரான்சிலுள்ள துஷார் என்பவர் ஆயுதங்களை நாட்டுக்கு அனுப்பி கொலைத் திட்டங்களை அரங்கேற்றவுள்ளதாக 2017.09.21 அன்றே நாமல் குமார பொலிஸ்மா அதிபர் பூஜிதவைச் சந்தித்து கூறியுள்ளார். அதன் பின்னரே நாமல் குமாரவுக்கு பொலிஸ்மா அதிபர் ஊடாக அப்போது பயங்கரவாத புலனாய்வு பிரிவு பிரதானியான நாலக சில்வாவின் தொடர்பு கிடைத்துள்ளது.

எனினும் இந்த தகவல் தொடர்பில் அவர் எந்த முறைப்பாடுகளையும் பதிவு செய்து விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை என்பது இதுவரையிலான விசாரணைகளில் தெளிவாகிறது. பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் கீழ் 3 தனி விசாரணை அலைப்புக்கள் உள்ளன.

150 இற்கும் அதிகமான அதிகாரிகள் உள்ளனர். அவர்களில் எவருக்கும் இந்த விடயம் கூட தெரியவில்லை. எனினும் டான் பிரசாத்துக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாமலின் குரல் பதிவை போட்டுக்காட்டியதாக கூறி கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முறுகலின் எதிரொலியாகவே சதி குறித்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த செப்டெம்பர் 5 ஆம் திகதி கொழும்பில் மக்கள் பேரணி இடம்பெற்ற வேளை இரு எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் எந்த உரிய பதிவுகளும் இன்றி 11 பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இவ்வகையான ஆயுதங்கள் நிமிடத்தில் பல ஆயிரம் தோட்டாக்களை வெளிப்படுத்த வல்லவை. 200 மீற்றருக்கு அப்பால் உள்ள இலக்கையும் தாக்கும். எனவே சன நெரிசல் மிக்க இடத்தில் அதனை எதற்காக கொண்டு சென்றனர் என்பது பாரிய சந்தேகத்துக்கு உரிய விடயமாகும்.

அத்துடன் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக தனக்கு கீழ் செயற்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்களைப் பயன்படுத்தி சிம் அட்டைகளைப் பெற்று, போலி பேஸ்புக் கணக்கை ஆரம்பிக்கச் செய்துள்ள விடயங்கள் ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் செய்யும் விடயங்கள் அல்ல. அத்துடன் அவர் விசேட வசதிகளைக் கொண்ட ஒரு வாகனத்தை பெற்றுக்கொண்டு பயன்படுத்தியுள்ளார்.

அதில் ட்ரோன் கமரா உள்ள்ளிட்ட பல வசதிகள் உள்ளன. இரகசியமாக அதனை எதற்காக பயன்படுத்தினார் என்பது குறித்து விசாரணை தொடர்கின்றது என மேலதிக விசாரணை குறித்து பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றுக்கு விளக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நான் ஐ.தே.கவுடன் இணையவில்லை

## லசந்த மறுப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட முக்கிய விஜயம் ஒன்றின் பேரில் தான் வெளிநாடு சென்றிருந்ததாகவும் அந்த நிலையில் தன்னைப் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் சில இணையத்தளங்கள் தவறான தகவல்களைப் பரப்பியுள்ளதாகவும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியான செய்தி குறித்து அவர்அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளதாகவும் அரச ஊடகமொன்று அறிவித்துள்ளது.

எனது அரசியல் வாழ்க்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பலப்படுத்தவும் அதன் அங்கத்துவத்தை அதிகரிக்கவுமே அர்ப்பணித்துள்ளேன். சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மக்களின் நன்மைக்காக பாடுபடுவதில் நான் திடமாக இருக்கிறேன்.



நான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனும் நாட்டின் எதிர்கால நன்மைக்காக நேர்மையாக செயற்படுவேன். அதேபோல் இந்த இரு தலைவர்களுக்கும் அனைத்து பேதங்களையும் மறந்து அனைவரும் ஆதரவு வழங்க வேண்டுமென்று அழைப்பு விடுக்கிறேன் என்று அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாக அந்த ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானியாக ஹிட்டிசேகர



ஜனாதிபதி பணிக்குழுவின் புதிய பிரதானியாக எச்.எம்.பி.ஹிட்டிசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தரான அவர் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தனக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். (இ-7)

# மக்களின் விருப்பத்திற்கு அமைவாகவே புதிய அரசாங்கம் செயற்படுகின்றது

## சபை முதல்வர் தினேஷ் கூறுகிறார்



(கொழும்பு)

மக்களின் விருப்பத்திற்கு அமைவாகவே புதிய அரசாங்கம் செயற்படுவதாக சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் மக்களின் விருப்பங்களுக்கு அமைய, நடவடிக்கை எடுக்கவேண்டுமென அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கடமைகளை அவர் நேற்று முன்தினம் பொறுப்பேற்ற போது இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் தவறான கொள்கைத் திட்டங்களினால் தேசிய பொருளாதாரத்திற்கு மேல் மாகாணத்திலிருந்து கிடைத்த பங்களிப்பு குறைந்திருந்தது.

அவற்றிற்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் சில அதிகாரங்களை மீண்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவது அவசியமாகும்.

தேசிய பொருளாதார மற்றும் சமூகவிடயங்களில் வீழ்ச்சி கண்டுள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதே புதிய அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று இந் நிகழ்வில் அனுசாசனம் வழங்கிய சங்கைக்குரிய முறுத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார். (இ-7)

## கந்தசஷ்டி ஞானவேள்வி

(யாழ்ப்பாணம்)

கந்த சஷ்டிப் பெருவிழாவை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷனில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 - 7.30 மணிவரை ஆறுபடை வீடுகள் என்ற திருமுருகாற்றுப்படையில் இரண்டாம் படை வீடாகிய "திருச்செந்தூர்" திருத்தலம் பற்றிய விரிவுரை இல. 700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறும்.(இ-7)

## நாலக டி சில்வா மீள விளக்கமறியலில்

(கொழும்பு)



முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கொலைத் திட்டம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## துரோகமாக கருத வேண்டாம்-சு.க.

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்தை வீழ்த்தியதும், ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்ததும் நல்லாட்சியில் செய்த துரோகமாக கருத வேண்டாம்.

நல்லாட்சியை ஆதரித்த மக்களுக்காக எடுக்கப்பட்ட தீர்மானமே இதுவென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பொறுமையை ஐக்கிய தேசியக் கட்சி உதாசீனப்படுத்தியதன் விளைவே இந்தத் தீர்மானம் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 9 விதி எண் 5

செவ்வாய் புதன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் தொழிலில் மிகுந்த அக்கறையுடையவர்கள். மனோதிடமும் உடல் பலமும் வாய்ந்தவர்கள். தன்னை நம்பியவருக்கு உண்மையாக நடந்து கொள்வார்கள். எதிர்ப்பவர்களுக்குப் பலம் வாய்ந்த எதிரியாக மாறி விடுவார்கள். இவர்கள் பலர் மதிக்கும் மனி தராவார்கள். வெளிநாட்டுத் தொழில் மூலம் பெரும்பணம் சம்பாதிப்பார்கள். முன்னேற வேண்டுமென்று ஓடோடி உழைப்பார்கள். துரிதமாக எக்காரியத்தையும் செய்து முடிப்பார்கள். இவர்களைப் போலவே மற்றவர்களும் வேகமாக செயற்பட வேண்டுமென்று எண்ணுவார்கள். சோதனைகளைக் கடந்து சாதனைகள் செய்யக் கூடியவர்கள். எறும்பைப் போலவே சுறுசுறுப்பானவர்கள்.

தீவிரமான உழைப்பாளிகள். தன் தகுதிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தேடுவார்கள். இளமையில் போராடி பருவ வயதிற்குப் பின்னர் அனைத்து வசதிகளையும் பெற்று வளமுடன் வாழ்வார்கள். யாரிடமும் வளைந்து கொடுத்துப் போகக் கூடியவர்கள். புத்தகப் பிரியர்கள். பாடல்கள், வசனங்களை வாயில் முணுமுணுத்துக் கொண்டேயிருப்பார்கள். அரசியல் ஆர்வமிருக்கும். எப்போதும் நாட்டு நடப்புகளைப் பற்றி அலசுவார்கள். காம சக்தியிருக்கும். போகத்தை அனுபவிக்க ஆர்வமுடையவர்கள். நிதானமானவர்கள். எப்பேர்ப்பட்ட பிரச்சினைகளையும் தன் சாமர்த்தியத்தால் வென்று விடுவார்கள்.

மக்கள் கூட்டத்தின் மத்தியில் வாழ்பவர்கள். அரசியலில் முக்கிய பங்கு வகிப்பவர்கள். ஓவியம், மருத்துவம், ஆன்மீகம், தத்துவம் போன்ற துறைகளில் சிறப்படைவார்கள். இவர்கள் எடுத்த முடிவை யாராலும் மாற்ற முடியாது. சோம்பேறிகளைக் கண்டாலே இவர்களுக்குப் பிடிக்காது. தனது நேரத்தை வீணாக்காமல் பயனுள்ளதாக மாற்றி விடுவார்கள். பணபலம், படைபலம் இரண்டும் தக்க நேரத்தில் வந்து சேரும். இவர்களின் வீரமான பேச்சு கோழையைக்கூட தைரியசாலியாக்கிவிடும். வாழ்க்கையின் பிற்கூறில் பணம் எளிய வழியில் வந்து சேரும்.

பெரியோர்களின் நட்பும், ஆன்றோர்களின் ஆசியும் கிட்டும். பெரியோர்களை மதிப்பார்கள். மலர்களை ரசிப்பார்கள். மனதில் எப்போதும் புது உற்சாகமிருக்கும். எப்போதும் சிரித்த முகத்துடனே காட்சியளிப்பார்கள். மற்றவர்களுக்குப் புத்தி கற்பிப்பதில் ஆசான்கள். தனது மனதிற்குப் பிடித்த நபர்களிடம் அதிக பாசம் வைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். நம்பிக்கை வைத்துவிட்டால் மிகவும் உதவுவார்கள். நாட்டின் முக்கிய பொறுப்புகள் இவர்களிடம் இருக்கும். தற்காப்பு இரகசிய கலைகளை அறிவார்கள். ஆடம்பர மோகமுடைவர்கள். அழகின் மீது மனதைப் பறிகொடுப்பார்கள். இன்று இவர்கள்




விரும்பிய ஒன்றை நாளை வெறுத்து விடுவார்கள். மாறுபட்ட மனோநிலை உடையவர்கள். முதுமையில் கஞ்சத்தனம் அதிகமிருக்கும். உணவு உண்பதில்கூட கணக்குப் பார்ப்பார்கள். காதல் எளிதில் வசமாகும். பெரிய மகான்களின் சீடர்களாக இருப்பார்கள். மின்னல் வேகத்தில் சிந்தித்துச் செயற்படுவார்கள். குதூகலமாக இருக்கக்கூடியவர்கள்.

புதுமையை விரும்பக் கூடியவர்கள். பல நல்ல குணங்களைப்பெற்றிருப்பார்கள். மற்றவர்களைத் தன்னுடைய பேச்சால் கவர்ந்திழுத்து விடுவார்கள். எளிமையைக் கடைப்பிடிப்பார்கள். கடவுள் பக்தி அதிகமிருக்கும். சட்டம், அரசியல், சாஸ்திர வழிமுறைகளை நன்கு அறிவார்கள்.

தர்மவான்கள். தன்னிச்சையாகச் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். ஆண், பெண் இருபாலார்களுக்கிடையே குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். தெய்வ நம்பிக்கை அதிகமிருக்கும். அடிக்கடி ஆன்மீகச் சுற்றுப்பயணம் மேற்கொள்வார்கள். எல்லாவற்றையும் நன்கு ஆராயும் குணம் உடையவர்கள். குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். தத்துவஞானிகள். கற்பனை செய்வார்கள்.

கம்பீரமாக நடப்பார்கள். குழந்தைகள் போலக் குரலை மாற்றிப் பேசுவார்கள். தன்னுடைய செயல்களை பற்றிய மற்றவர்களின் விமர்சனங்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள். மற்றவர்களின் புகழ்ச்சிக்கு மயங்கி அவர்களுக்கு உதவிகள் செய்வார்கள்.

பண விடயத்தில் கண்டிப்பு மிக்கவர்கள். சிறு முன்னேற்றமும் இவர்களைப் பெரிதும் உற்சாகப் படுத்திவிடும். நல்ல வாழ்க்கைத்துணை அமையும்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்டதிகதிகள்.
6,15,24,5,14,23,9,18,27.

துரதிர்ஷ்ட திகதிகள்
2,11,20,29.

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர்நீலம், மஞ்சள், நீலம், பொன்னிறம், சிவப்பு, சாம்பல் நிறம், சிமெண்ட் நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
வைரம், சிர்க்கான், பவளம், ப்ளட்ஸ்டோன், கார்னட், ஓபல்

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

91



மேலும் செல்வத்தைக் குவிக்கும் நோக்கோடு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த டச்சுக்காரருக்கு மன்னாரில் விளைந்த முத்துக்களும் வன்னிப் பெருநிலப்பரப்பில் பெருவாரியாகக் காணப்பட்ட யானைகளும் அவற்றால் ஈட்டக்கூடிய பெருந்தொகைச் செல்வமும் நிச்சயம் அவர்களுக்குப் பேராசையை ஏற்படுத்தியிருக்கும்.

இவையே அவர்கள் முத்து விளையும் மன்னாரையும் யானை வர்த்தகத்தில் பிரபலம் வாய்ந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தையும் கைப்பற்றுவதற்குக் காரணங்களாக அமைந்தன.

அத்தோடு தென்னிந்தியாவோடும் தென்கிழக்காசிய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகளை அதிகரிப்பதற்கும் அரசியல் மேலாண்மையை விரிவுறச் செய்வதற்கும் தென்னிந்தியாவை அண்மித்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடும் மன்னார் பிரதேசமும் மிகவும் முக்கியம் வாய்ந்த துறைமுகப் பிரதேசங்களாகக் காணப்பட்டன.

மேலும் மன்னாரிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்க மதத்திற்கு மாறியிருந்தனர்.

எனவே மேற்படி பிரதேசங்களைக் கைப்பற்றுவதன் மூலம் தமது புரட்டஸ்தாந்து மதத்தை அம்மக்கள் மத்தியில் இலகுவாகவும் வெற்றிகரமாகவும் பரப்பலாம் என்பதும் டச்சுக்காரருக்குத் தெரிந்திருக்காமல் விட நியாயமில்லை.

இக்காரணங்களினால்தான் டச்சுக்காரர் திட்டமிட்டு மேற்படி பிரதேசங்களை அபகரித்துக் கொண்டனர்.

மன்னார் கைப்பற்றப்பட்டு அங்கிருந்து போர்த்துக்கீசர் வெளியேற்றப்பட்டு விட்டதால் அவர்களது அடுத்த நடவடிக்கையானது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதாகவே இருக்கும் என்பது வான் கோன்ஸின் அறிக்கையிலிருந்து புலனாகின்றது.

மன்னார் கைப்பற்றப்பட்ட பின்பு 1100 டச்சுப் போர் வீரர் மாதோட்டத்திலிருந்து புறப்பட்டு வன்னிப் பெருநிலப்பரப்பின் ஊடாக பூநகரியைச் சென்றடைந்தனர். 7 ஆம் திகதி பங்குனி மாதம் 1658 இல் போர்த்துக்கீசப் படைகளை எதிர் கொண்டனர்.

பாரிய கருங்கற்களால் கட்டப்பட்ட சென்போல் (St.Paul) கிறிஸ்தவத் தேவாலயத்திலிருந்து போர்த்துக்கீசர், டச்சுக்காரப் படைகளைத் தாக்கினர். இச்சமரில் 40 டச்சுப் படைவீரர் மரணமடைந்தனர்.

“மன்னார் கைப்பற்றப்பட்டு அங்கிருந்து போர்த்துக்கீசர் வெளியேற்றப்பட்டு விட்டதால் அவர்களது அடுத்த நடவடிக்கையானது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதாகவே இருக்கும் என்பது வான் கோன்ஸின் அறிக்கையிலிருந்து புலனாகின்றது. மன்னார் கைப்பற்றப்பட்ட பின்பு 1100 டச்சுப் போர்வீரர் மாதோட்டத்திலிருந்து புறப்பட்டு வன்னிப் பெருநிலப்பரப்பின் ஊடாக பூநகரியைச் சென்றடைந்தனர்”

## டச்சுக்காரரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இவ்வேளையில் 1100 பேரைக் கொண்ட டச்சுத் துணைப் படையொன்று கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு முன்பே ஊர்காவற்றுறைக் கோட்டையை நோக்கிப் புறப்பட்ட டச்சுப் படையினர் அங்குள்ள போர்த்துக்கீசப் படைகளைச் சரணடையுமாறு கட்டளையிட்டனர்.

போர்த்துக்கீசப் படைகள் மறுக்கவே கோட்டையினுள் நுழைந்த டச்சுப்படைகள் அவர்களைத் தாக்கி அதனை 26 சித்திரை 1658 இல் கைப்பற்றினர்.

தொடர்ந்து டச்சுக்காரர் போர்த்துக்கீசப் படைகளின் பாசறையாகிய யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கிப் படையெடுத்தனர். இதேவேளையில் இந்தியாவிலிருந்து எதுவித படை உதவிகளும் போர்த்துக்கீசருக்குக் கிடைக்காத வண்ணம் கோட்டையைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

போர்த்துக்கீசர் சுமார் மூன்று மாதங்களாகக் கோட்டையைப் பாதுகாத்த வண்ணம் டச்சுப் படைகளை எதிர்த்துப் போராடினர்.

வெளியிலிருந்து உணவு, குடிநீர், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் போத்துக்கீசர் பெருஞ் சிரமத்தைச் சந்தித்தனர்.

இறுதியில் இயலாத நிலையில் போர்த்துக்கீசப் படைகள் டச்சுப் படைகளிடம் 24 ஆனி மாதம் 1658 ஆம் ஆண்டு சரணடைந்தன. இத்தோடு யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசரின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

இப்போரின் போது போர்த்துக்கீசப் போர்வீரர்கள், கூலிப் படையினர், பாதிரிமார், அடிமைகள் உட்பட 2170 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் 800 போர்த்துக்கீசரும் 200 படைவீரர்களும் 600 கூலிப்படைகளும் 300 அடிமைகளும் அடங்குவர்.

மேலும் டச்சுக்காரர் யாழ்ப்பாணக் கோட்டை மீது படையெடுத்தபோது மொத்தமாகச் சுமார் 3500 பேர் வரை அக்கோட்டைக்குள் இருந்திருக்கின்றனர் எனப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

டச்சுக்காரருக்குப் பயந்து பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் வேறும் பலர் தஞ்சம் புகுந்தனர் என்றும் மேற்படி அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

கைப்பற்றப்பட்ட போர்த்துக்கீசரும் கூலிப்படையினரும் கொழும்புக்கும் கோவாவுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். சிலர் போர்த்துக்கல்லுக்கும் அனுப்பப்பட்டனர்.

அத்தோடு மேற்படி கோட்டையிலிருந்த 300 அடிமைகளையும் பல கயிற்றுக்கட்டுக் கோர்வைகளையும் 30000 டச்சுக் கில்டர்கள் பெறுமதியான தங்கத்தையும் டச்சுக்காரர் தம் வசமாக்கிக் கொண்டனர்.

இப்போரில் டச்சுக்காரர் தமது 98 போர்வீரரையும் 100 கூலிப்படையினரையும் இழந்திருக்கின்றார்கள். இவ்வாறு மன்னாரிலும் பலர் இறந்திருக்கின்றனர் என்பதனையும் அறியமுடிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாடு டச்சுக்காரர் வசமாகிய பின் பூநகரியில் மரத்தாலான காப்பரண்கள் அமைக்கப்பட்டு அங்கு காவலுக்காக போர்வீரர் நிறுத்தப்பட்டனர்.

பின்னர் 1681 இல் இக் காப்பரண்கள் கற்களினால் கட்டப்பட்டன. இக்காலப் பகுதியில் ஆனையிறவிலும் மரத்தாலான காப்பரண்கள் கட்டப்பட்டன. அரிப்பிலும் முதலில் மரத்தாலும் பின்னர் கற்களாலும் காப்பரண்கள் கட்டப்பட்டன.

யாழ்ப்பாணக் கோட்டையில் நல்ல குடிநீர் பெறுகின்ற வசதி இருக்கவில்லை.

(தொடரும்)



யாழ்.கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பித்தார். (படங்கள்:-மகாலிங்கம்)





இனிய இதயங்கள் அமைப்பு மற்றும் லயன்ஸ் கழகத்தினர் இணைந்து தீபாவளி தினத்தில் கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வினை நடத்தினர். நிகழ் வில் யாழ். மாவட்ட முன்னாள் லயன்ஸ் கழக ஆளுநர் லயன் தியாகராஜா கலந்துகொண்டு முதியவர்களை கௌரவித்ததுடன் பரிசில்களையும் வழங்கி வைத்தார். மேலும் பிரதேச லயன்ஸ் தலைவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள்:-சுபேசன்)

## மைத்திரியுடன் மகிந்த இணைந்தாலும் தாமரை மொட்டிலேயே தேர்தலில் போட்டி

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

(கொழும்பு)

பொதுஜன பெரமுன எதிர்வரும் காலங்களில் தாமரை மொட்டு சின்னத்திலே போட்டியிட வேண்டும் என்பது கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் எதிர்பார்ப்பாக காணப் படுகின்றது.

இருப்பினும் தற்போதைய அரசியல் மாற்றத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினரும் திருப்தியடைய கூடிய தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகல காரியவசம்,

இடம்பெறவுள்ள மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், பொது ஜன பெரமுனவும் எவ்வாறு போட்டியிடும் என்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுமே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)



அங்கஜன் இராமநாதன் விவசாய பிரதி அமைச்சராக மீண்டும் தனது பொறுப்புக்களை நேற்று முன்தினம் ராஜகிரியவில் அமைந்துள்ள பிரதி அமைச்சின் காரியாலயத்தில் உத்தியோகபூர்வமாக ஏற்றிருந்தார்- இதன்போது பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதன், அமைச்சின் செயலாளர்,ஊடக பிரதானி மற்றும் அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## அருள் ஒளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் வெளியீடான "அருள் ஒளி" புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது. (இ

## இரு குழுக்களிடையே மோதல்; மூவர் கைது

(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகரில் நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சில தினங்களாகவே குறித்த இரு குழுக்களுக்கும் பரஸ்பரம் கருத்து முரண்பாடுகள் இருந்து வந்ததாகவும் அதன் விளைவாக இம் மோதல் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட மூவரையும் நேற்று அதிகாலை நிபந்தனைகளுடன் விடுவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1552

### தனம்

தீமைக்கு நாம் அடிமையாகாமல் இருக்க வேண்டுமானால்



நமது எண்ணங்கள் தீமைகளுக்கு இடமளிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

### சரோ

துணிப்பை என்பது எளிமையானது, தூர எறிந்தால் உரமாவது



பிளாஸ்டிக் என்பது அழகானது, விட்டு எறிந்தால் விசமாவது

### லீலா


இளமையை வயதைக்கொண்டு கணக்கிடாதீர்கள்



தன்னம்பிக்கை மனதில் இருக்கும் வரை இளமை உடலில் இருக்கும்

### விஜி

பிறர் செய்வதில் எது உங்களுக்குப் பிடிக்கவில்லையோ



அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே!

### பவானி

நேற்றைய நாள் கடினமாக இருந்திருக்கலாம் இன்றைய நாளும் கடினமாக இருக்கலாம்



ஆனால் நிச்சயமாக ஒருநாள் பிரகாசமாக மாறும்

### நிர்மலா

கால எல்லையைத் தவிர வேறு எந்த விதத்திலும் ஒருவரின் அறிவாற்றலை அபகரிக்க இயலாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

தேவையேற்படின் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாக, நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது எனத் தெரிவித்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ,அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இருப்பதனால், அதற்கான தேவை ஏற்படாது என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்றது. இதன் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமர் நியமிக்கப்பட்டமைக்கான அடிப்படை காரணங்கள் தொடர்பில், சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சர்வதேசத்தின் ஆதரவை தொடர்ந்து வழங்குவதற்கு, புதிய அரசாங்கத்தின் மீது எவ்விதமான சந்தேகத்தையும் கொண்டிருக்கவேண்டிய தேவையில்லையென, ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில், எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க போவதாக தெரிவித்திருந்த, அத்துரலிய ரத்ன தேரரும், பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சம்பள உயர்வை வலியுறுத்தி பேருந்து ஊழியர்கள் பகிஷ்கரிப்பு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண இ.போ.ச. பேருந்து ஊழியர்கள் தங்களது சம்பள உயர்வை வலியுறுத்தி பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு பேருந்து நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து குறித்த பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியிலிருந்து பணிப் பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், தங்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரைக்கும் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-7)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் கடந்த 2 ஆம் திகதி சமுர்த்தி மாதிரி வீட்டுத்தோட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி தலைமையில் நடைபெற்றது.

# முற்றத்தில் தேங்கிய வெள்ளத்தால் மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

(காத்தான்குடி)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் புதிய காத்தான்குடி-06. அன்வர் பள்ளி வீதியைச் சேர்ந்த ஏ.எல். எம். அனீஸ் (வயது-39) என்பரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டு வளாகத்தில் மின் விளக்கு பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மின்சாரத்துடன் தொடர்பு வயர் வீட்டு முற்றத்தில் தேங்கிக் கிடந்த மழைநீரில் தொடர்பு பட்டு இவர் மீது மின்சாரம் தாக்கியுள்ளது.

பாதிக்கப்பட்டவரை உடனடியாகவே காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (இ-7)



மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு அண்மையில் வாதரவத்தை உதவும் கரங்கள் சமூக சேவை அமையத்தினரின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வாதரவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. இதேவேளை வாதரவத்தை உதவும் கரங்கள் சமூக சேவை அமைய உறுப்பினர்களால் பயன்தரு மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. (படங்கள்:-சோபிகா)

# நான் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது இலங்கையில் மனம் திறந்தார் நிஸாம்தீன்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்ட பின்னர், குற்றமற்றவன் என நிரூபிக்கப்பட்டு அவுஸ்திரேலியப் பொலிஸாரினால் நான் விடுவிக்கப்பட்டுள்ளேன். எனக்கு நிகழ்ந்த அநீதிக்கு நான் மாணவர் விசாவில் இருந்ததுடன், ஆசிய பிரஜையாக இருந்தமையே காரணமாகும் என அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்ட இலங்கைப் பிரஜை கமர் நிஸாம்தீன் தெரிவித்தார்.



அவுஸ்திரேலியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்ட இலங்கைப் பிரஜையான கமர் நிஸாம்தீன் கடந்த ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஷங்-ரி-லா ஹோட்டலில் அவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புள்ளதாகக் குறிப்பிட்டு அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட எனக்கு கடந்த செப்டெம்பர் 28 ஆம் திகதி பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பின்னர் விசாரணைகளின் மூலம் நான் எவ்வித குற்றமும் இழைக்கவில்லை என்ற விடயம் நிரூபிக்கப்பட்டு, கடந்த ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி அவுஸ்திரேலிய பொலிஸாரால் விடுவிக்கப்பட்டேன்.

குற்றச்சாட்டுக்கு அடிப்படையாக அமைந்த கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல என கையெழுத்து தொடர்பிலான விசேட நிபுணர்கள் இருவரால் நிரூபிக்கப்பட்டது. அத்தோடு குற்றச்சாட்டுடன் தொடர்புடைய குறிப்புப் புத்தகம் என்னுடைய அறையில் அல்லாது வேறொரு அறையில் இருந்து கிடைக்கப்பெற்றமை நான் குற்றமற்றவன் என நிரூபணமாவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 260 | 240 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 160 | 140 | 200 |
| தக்காளி | 350 | 300 | 240 | 150 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 60 |
| கோவா | 160 | 150 | 160 | 150 | 200 |
| கரட் | 180 | 300 | 200 | 140 | 320 |
| பூசணி | 80 | 60 | 60 | 30 | 80 |
| புடோல் | 160 | 160 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 160 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 150 | 200 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 400 | 300 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 180 | 120 | 200 | 90 | 200 |
| பீற்றூட் | 100 | 140 | 120 | 60 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 140 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 200 | 110 | 120 |
| போஞ்சி | 300 | 280 | 280 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 240 | – | 200 | 200 |
| கீரை – 1பிடி | 60 | 80 | 50 | 30 | 60 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 180 | 300 | – | 240 |
| வெங்காயப்பூ | 350 | – | – | 120 | – |
| முள்ளங்கி | 80 | 100 | – | 30 | – |
| பொன்னாங்காணி | 60 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | 120 | 120 |




# சிறுவனின் உபதேசம்



ராஜவர்மன் விஜயபுரியின் அரசன். அவனுக்குத் தான் அரசனாகவும் இருக்க வேண்டும் அதேநேரத்தில் ஆன்ம இலாபம் தரும் ஞான வினையையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் தணியாத ஆவல்.

உடனே அமைச்சரைக் கூப்பிட்டு, "நம் நட்டில் உள்ள குருமார்கள் இங்கு அரண்மனைக்கு வந்து தாங்களுக்குத்தெரிந்த ஞான வித்தைகளை எனக்குப் பயமின்றி உபதேசிக்கலாம். அப்படிச் செய்யும் உபதேசங்களில் என் மனதைக் கவரும் உபதேசம் எதுவோ அதற்கு, உபதேசித்தவர் கேட்பதைப் பரிசிலாகத் தருவோம்" என பறையறிவிக்கச் சொன்னான்.

வாயிலில் ஒரு ஆராய்ச்சி மணியையும் கட்டினான். வந்தவர்கள் மணியை அடிக்க, அமைச்சர் அவர்களை அழைத்துப் போய் நீராட, உண்ண, உடுக்க எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து அரசவைக்கு இட்டுச் செல்வார்.

இதைக் கேள்வியுற்ற குருமார்களும் அறிஞர்களும் அரசவை சென்று தாங்களுக்குத் தெரிந்தவற்றை உபதேசிக்க மன்னனுக்குத் திருப்தி இல்லை. அவர்களையெல்லாம் விருந்தினர் மாளிகையிலேயே சிறை வைத்துவிட்டான்.

அந்த நாட்டிலுள்ள ஒரு சிற்றூரில் அட்டகோணலுடன் விகாரமான சிறுவன் இருந்தான். பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் அவனை உன் தந்தை யாரெனக் கேலி பேச, வீட்டுக்கு வந்தவன் அன்னையிடம், "என் தந்தை எங்கே?" எனக் கேட்டான். "அப்பா மகனே! உன் தந் தையை அரசன் சிறை வைத் துள்ளான்" என முழுக் கதை யையும் கூற,

"அம்மா! நான் போய் அப்பாவை மீட்டு வருகிறேன்" எனத் தாய் தடுத்ததையும் மீறிக் கிளம்பி அரசவை வந்தான். அவன் உருவையும் வயதையும் கண்டு எல்லோரும் எள்ளி நகையாடினார்கள்.

எல்லோரும் நகைத்ததைக் கண்ட சிறுவன் அரசனை நோக்கி, "ஏன் சிரித்தீர்கள்? என் உருவைக் கண்டா? அல்லது சிறுவனா நமக்கு உபதேசம் செய்யப் போகிறான்? என்று என் வயதைக் கண்டா?" என்று கேட்டான்.

ஒருவரும் பதில் பேசவில்லை. பின்னர் அரசனை நோக்கி, "அரசே! ஏன் நகைத்தீர்? குயவனைப் பார்த்து நகைத்தீரா? அல்லது பாண்டத்தைப் பார்த்து நகைத்தீரா? என வினவினான். அரசனுக்குக் குயவன் என்றால் யார்? பாண்டம் என்றால் எது? எனப் புரியவில்லை.

சிந்தை மருண்ட மன்னனோ, உடனே சிறுவனை நோக்கி,

"எனக்கு ஞான உபதேசம் செய்வித்து அருளல் வேண்டும் தங்களின் சித்தம் என்னவோ அதுபோல் நான் நடக்கிறேன்" எனக் கேட்டுக் கொண்டான்.

அதற்கு, சிறியவன், "அரசே! நீ உனக்குச் சொந்தமாக எண்ணியிருப்பதை எனக்குத் தானம் செய். பின்னர் உபதேசிக்கிறேன்" என்றான்.

அரசன்: கழுத்தில் கிடந்த விலையுயர்ந்த மணிமாலையையும் என் ஆபரணங்களையும் தந்துவிட்டேன் என்றான்.

சிறுவன்: "இவையெல்லாம் உன் பிள்ளைகளுக்குரியது. உனக்கல்ல. எனவே வேண்டாம்"

அரசன்: "இந்த நாட்டையே தருகிறேன்"

சிறுவன்: "இந்த நாடு மக்களுக்குச் சொந்தம். இதுவும் வேண்டாம். உனக்குரிய, சொந்தமான பொருளை உணர்ந்து கொடு"

அரசன்: "என் உடல் எனக்குத்தான் சொந்தம். அதைத் தருகிறேன்"

சிறுவன்: "உன் உயிர் பிரிந்ததும், அது மண்ணுக்குச் சொந்தம். நீ தூங்கும் போது, உன் உடலின் மேல் ஒரு பாம்பு ஊர்ந்தாலும் உனக்குத் தெரிவதில்லையே? அப்படி இருக்க உனக்கு அது எப்படிச் சொந்தம்?"

இப்படியே ஒவ்வொன்றையும் சிறுவன் மறுத்துச் சொல்ல அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள். தந்து விடுகிறேன் என்றான்.

"உன் மனம்தான் உனக்குச் சொந்தம். எல்லோர் முன்னிலையிலும் தானம் கொடு" என்றான் சிறுவன்.

அப்படியே தான சம்பிரதாயங்கள் முடிவடைய சிறுவன் வெளியில் புறப்பட்டான். அரசன் சிறுவனை நோக்கி, "குருவே! உபதேசம் செய்யாமல் செல்லுகிறீர்களே!" என வினவ,

அச் சிறுவன், "அரசே! உன் மனதை எனக்குத் தானம் செய்தது உண்மையில்லை. இன்னும் உன் மனம் உன்னிடமே இருக்கிறது. எப்படி நான் உபதேசிக்காமல் செல்வதை நீ எப்படி உணர்ந்து கேட்டாய்?" என்றான்.

அரசன் திடுக்கிட்டு வணங்கி, "குருவே! உங்களின் ஆணைப்படியே நடக்கிறேன். இனி என் வயம் ஏதுமில்லை" என்றான்.

"சிறை பிடித்தவர்களை விடுதலை செய்க" என்றான் சிறுவன். அப்படியே நடந்தது. பின்னர் சிறுவன் உபதேசித்தான். என்ன உபதேசித்திருப்பான்?

"அரசே உருக்கண்டு எள்ளாமை வேண்டும். உன் உடலில் உயிர் உள்ளவரை உனக்கு உன் மனம் மட்டுமே சொந்தம். அதுவும் உணர்வு இருக்கும்போது மட்டுமே. தூங்கும்போது மனம் உனக்குச் சொந்தமல்ல. ஆகவே, உணர்வால் மனத்தை அடக்கு. எப்பொழுதும் நீ உன் உணர்விலேயே நில். அது உனக்கு இறைவனை அடைய வழிகாட்டும்"

## பள்ளிக்கூடம் போகலாமே சின்னப்பாப்பா



பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா -நிறைய
பிள்ளைக ளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா - கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சி
சின்ன பாப்பா - உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சி
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் - அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா - ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா - நிறைய
பிள்ளைக ளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!

## பொது அறிவு துணுக்குகள்

- உயிரின் ஆறு என அழைக்கப்படுவது, இரத்தம்.
- வானவில்லில் 7 நிறங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்தவர், ஐசக் நியூட்டன்.
- ஒரு நெருப்புக்கோழியின் முட்டை, 22 கோழி முட்டைகளுக்கு சமம்.
- பச்சோந்தியின் நாக்கு, அதன் உடலைப்போன்று இரண்டு மடங்கு நீளமாக இருக்கும்.
- உலக வானிலை மையம் அமைந்துள்ள இடம், ஜெனீவா.
- யானையின் துதிக்கையில் சுமார் 40 ஆயிரம் தசைகள் உள்ளன.
- புத்தர் பிறந்த இடம், லும்பினி.
- மிகப்பெரிய பூ பூக்கும் தாவரம், ஹராப்லேசியா.
- வாசனைப் பொருட்களின் ராணி என அழைக்கப்படுவது, ஏலக்காய்.
- நமது மூளை ஏறக்குறைய 60 இலட்சம் செல்களால் ஆனது.
- புனித நகரம் என்று அழைக்கப்படுவது, ஜெருசலேம்.
- உலகின் மிகப்பெரிய தீபகற்பம், அரேபியா.
- பூகோள சொர்க்கம் எனப்படும் இடம், காஷ்மீர் (இந்தியா).

மனிதனுடைய உண்மையான கண்ணியம் தன்னைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதிலேயே உள்ளது.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இறுக்கமான சூழ்நிலையில் ஜனாதிபதி மைத்திரி

பாராளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற ஊகங்கள் நாட்டில் பரவலாக ஏற்பட்டுள்ளது.

அந்தளவுக்கு அரசியல் ஸ்திரத்தன்மை பலவீனப்பட்டுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

எனினும் பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நான்கரை வருடங்களைப் பூர்த்தி செய்தபின்பே பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்றும் அரசியலமைப்பைக் கற்றறிந்தார் வியாக்கியானம் செய்கின்றனர்.

எதுஎவ்வாறாயினும் குழப்பமான அரசியல் சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதாக ஜனாதிபதி அறிவித்தால் அதற்கு மாற்றுக்கருத்தை அல்லது மாற்றுத் தீர்ப்பை எங்கும் பெற முடியாது என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

ஆக, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை அரசமைப்புக்கு விரோதமானது என்ற கருத்து வலுப்பெற்றிருந்தபோதிலும் அது தொடர்பில் நீதிமன்றத்தை நாடுகின்ற செயற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எவரும் முன்னெடுக்காதவரையில் இலங்கையின் அரசியலமைப்பு என்பது இன்னமும் சிக்கலும் குழப்பங்களும் நிறைந்ததாக இருக்கின்றது என்பது மட்டும் உண்மையாகின்றது.

இந்த அடிப்படையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதாக அதிரடியாக அறிவித்தால் அந்த அறிவித்தலையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர மாற்றுவழி இல்லை என்பதே உண்மை.

தவிர, பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்ற ஆர்வம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தரப்பிடம் நிறையவே இருக்கின்றமையால், அந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரக்கூடிய சூழ்நிலை உண்டு.

இதற்கு மேலாக தற்போது பிரதமர் பதவியில் இருக்கின்ற மகிந்த ராஜபக்ஷ தனக்கான பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றியாகவும் மைத்திரியின் அதிரடி முடிவுக்கு எதிர்ப்பாகவும் அமையும்.

இவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாகவே தான் பதவியில் இருந்து விலகி தன் வீட்டுக்குச் சென்றுவிடுவதாக ஜனாதிபதி மைத்திரி ஏலவே அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு ஓர் அவசர முடிவு என்றும் இந்த அறிவிப்பை தான் விட்டிருக்கக் கூடாது என்றும் நினைக்கின்ற கட்டத்திலேயே ஜனாதிபதி மைத்திரியின் மனநிலை உள்ளது என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் எல்லாக் குழப்பங்களுக்கும் தீர்வாக பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவதுதான் ஒரே வழி என்பதாக நிலைமை மாறியுள்ளது.

இதை இன்னும் விளக்கமாகக் கூறினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாடம் புகட்ட நினைத்து அரசியலமைப்பைத் தவறாகப் பயன்படுத்துகின்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைக் கைதியாகியுள்ளார் என்பது மட்டுமே இப்போதைக்கு நாம் கூறக்கூடிய விடயமாகும்.

## பொதுச்சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துகின்றனர்
# முன்னாள் பிரதமர், அமைச்சர்களுக்கு எதிராக பூஜிதவிடம் முறைப்பாடு!

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அமைச்சர்களின் செயலாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் அஜித் ஜெயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரவையின் உறுப்பினர்கள் பொதுச் சொத்துக்களை முறைகேடாகப்பயன்படுத்துவதாக குற்றம் சுமத்தியே இந்த முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டு, 13 நாட்கள் கடந்துள்ள நிலையில், முன்னாள்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் அலரி மாளிகையில் தங்கியிருந்து பொதுச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தி வருவதாகவும் அவர குற்றம் சுமத்தியுள்ளார.

அத்துடன் முன்னாள் அமைச்சர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள், வீடுகளை இதுவரை கையளிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# கிழக்கில் வெள்ள அபாய பாதிப்பு நடவடிக்கை எடுப்பாரா ஜனாதிபதி?
## நஸிர் அஹமட் கேள்வி

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று நாட்களாக தொடரும் அடைமழை காரணமாகப் பல்வேறு பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு எதுவித பேதங்களும் இன்றி ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் நஸிர் அஹமட்,

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் கொள்ளப்படுமா? 'என்ற சந்தேகம் மக்களுக்கு இருக்கின்றது. குறிப்பாக திடீரென ஏற்படும் அனர்த்தங்கள் குறித்து துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில் தேக்கநிலை இருப்பதை அவதானிக்க முடிகிறது.

தற்போது மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அதிக அளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதென இந்த மாவட்டங்களில் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையங்களின் தரவுகளின் மூலம் அறிய முடிகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, பாசிக்குடா, வாழைச்சேனை, உன்னிச்சை, பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, மைலாம்பாவெளி, ஏறாவூர், மட்டக்களப்பு நகர், செங்கலடி, கிரான் போன்றபகுதிகளும் - அம்பாறையில் பொத்துவில், திருக்கோவில்,லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர், ஒலுவில், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருத முனை போன்ற பகுதிகளும் - திருமலையில் கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை நகர், மூதூர் போன்ற பல பிரதேசங்கள் வெள்ள அபாயத்துக்குள் சிக்குண்டுள்ளன.

இப்பிரதேசங்களில் உள்ள தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் தமது வீடுகளுக்குள் வாழ முடியாத அவலத்தை எதிர் கொண்டுள்ளனர். பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, இப்பகுதிகளில் காலதாமதமின்றி துரிதகதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதறகான நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுக்கவேண்டும். இதில் கட்சி பாகுபாடுகள் இன்றி அனைத்து தரப்பினரும் இணைந்து செயலாற்ற முனவரவேண்டும் என அவா மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

வழிபாடு செய்கின்ற நாம் வடதிசை நோக்கி வழிபட வேண்டும். வீட்டில் இறைவனுடைய திருவுருவப் படங்கள் அனுகூலத்துக்கு ஏற்ப எல்லாத் திசைகளிலும் வைத்து வழிபடலாம். இறைவனுக்கு எல்லாத் திசையும் ஒன்றுதான்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்"

~லியூசி லர்கோம் (அமெரிக்க கலைஞர்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### யார் முதலில் விழித்தெழுவது

யாா முதலில் விழித்தெழுவது நீங்களா அல்லது இறைவனா?

நங்கள தான முதலல வழிததெழுகறாகள -இறைவன் இன்னும் துயிலில் உள்ள போது!

நீங்கள் விழித்தெழும் போது இன்பத்தையும் துன்பத்தையும் நீங்கள் அனுபவிக்கிறீர்கள்.இவ்வுலகின் அழகு மற்றும் குறைபாடுகள் பற்றி விழிப்புணர்வு கொள்கிறாகள.பறகு நங்கள இறையன உதவயை நாடுகறாகள. உங்களுடைய கூக்குரல் இறையை எழுப்புகிறது.பிறகு இறைவன் உங்களில் விழித்தெழுகிறார்.பிறகு நீங்கள் என்றும் இறைவன் என்றும் வேறுவேறாக "இரண்டு" இல்லை.

இறைவன் இவ்வண்டத்தின் ஒவ்வொரு துகளிலும் துயில் கொண்டுள்ளான்.உன்னில் இறைவன் வித்து வடிவததல (ரூபததல) உளளான. அவன துயலலருநது விழித்தெழும் போது நீங்களோ அல்லது உலகமோ இருப்பதில்லை.

ஒவ்வொரு காலை நேரமும் இறைவனைத் துயிலெழுப்புவதாக ஒரு பழக்கத்தை ரிஷிகள் செய்துள்ளார்கள். அதை அவர்கள் சுப்ரபாத சேவை என்கிறார்கள்.அதனில் உள்ள ஆழமான கருத்தைப் புரிந்து கொள்ளாததால் பலர் அதை கேலியாக பார்க்கிறார்கள்.துயிலெழுந்த இறையால் மாததிரமே இறை எஙகும துயலுவதைக காண முடியும! (சிரிப்பு)

பிரெண்டா :நாம் ஏன் விழித்தெழ வேண்டும்?

ஸ்ரீஸ்ரீ:ஏனெனில் நீங்கள் இப்போது துயிலில் இல்லையே நங்கள தூஙகக கொணடிருநதால நங்கள எபபடி கேள்வி கேட்க முடியும்?

பில்:ஒருமுறை விழித்தெழுந்த பிறகு மறுபடியும் தூங்கக்கூடுமா?

ஸ்ரீஸ்ரீ:நங்கள தேநா குடிககவலலையெனறால நிச்சயமாக முடியும்.

பில் :யார் நம்ம்ம துயிலெழுப்புவது?

ஸ்ரீஸ்ரீ:நீங்கள் அதைக் கண்டுபிடியுங்கள்.

## மரநடுகையும் மலர்க் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தினை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரநடுகையும் மலர்க் கண்காட்சியும் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை யாழ. பிரதேசத்தில சோரன் பற்று, மாசேரி, காங்கேசன் துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன் காமம், பலாலி, வசாவி ளான், காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படை முகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி, பொக்கணை, தொண்டைமானாறு, கெருடாவில், அக்கரை, வளலாய், மயிலியதனை, சிதம்பரா கல்லூரி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில முள்ளியவளை ஒரு பகுதியிலும் வவுனியா பிரதேசத்தில காத்தர்சின்னக்குளம் கிராமம், தோணிக்கல் கிராமம், மலையாபருத்திக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கனிலிருந்து தலைமன்னார் பிரதேசம் முழுவதும, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ST. Lourdes ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், இளைஞர் பயிற்சி நிலையம், Time ஆடைத்தொழிற்சாலை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மனனார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவ முகாம், தள்ளாடி டயலொக் கோபுரம், தள்ளாடி இராணுவ முகாம், பேசாலை Palmyrah House, மன்னார் அரசாங்க அதிபர் அலுவலகம், நானாட்டான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(9)

# விறுவிறுப்பின் உச்சம் வரை சென்ற ஆட்டம்

# சென்றலைட்ஸ் அணி திறில் வெற்றியுடன் சம்பியன்



பற்றீசியன் அணியின் அனுபவ ஆட்டம் போட்டியை விறுவிறுப்பாக்கியது. விடாது சமநிலை என்ற நிலையில் சென்ற ஆட்டத்தில் மேலதிக நிமிடத்தில் ஒரு புள்ளி முன்னிலை பெற்று சம்பியனாகியது சென்றலைட்ஸ் அணி.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், மறைந்த பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தப்பட்டு வந்தது.

இதன் இறுதியாட்டம் கடந்த 6 ஆம் திகதி இரவு நடைபெற்றது. இதில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ்விளையாட்டுக்கழகம் மோதியது.

முதற்கால் பாதியாட்டம் முடிவில் பற்றீசியன் அணி, 19:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்து மிக இறுக்கமாக நடைபெற்ற ஆட்டத்தில் முதற்பாதியாட்டம் முடிவடைகையில் இரு அணிகளும் தலா 31 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

மூன்றாவது கால்பாதியாட்டம் மிகவும் விறுவிறுப்பாக இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன. மூன்றாம் பாதியாட்டம் முடிவடையும் போது பற்றீசியன் அணி 42:41 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இதனால், நான்காவது கால்பாதியாட்டம் மிகவும் விறுவிறுப்படைய சென்றலைட்ஸ் அணியும் விட்டுக் கொடுக்காது ஆடியது. நான்காவதும் இறுதியுமான கால் பாதியாட்டம் முடிவடையும் போது இரு அணிகளும் தலா 55 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அந்த ஐந்து நிமிடங்களில் சென்றலைட்ஸ் அணி தங்கள் வெற்றியை உறுதி செய்தது. முடிவில் சென்றலைட்ஸ் அணி, 61:60 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது. இச் சுற்றுப் போட்டியின் தொடர் நாயகனாக சென்றலைட்ஸ் அணியின் ஹர்சன் தெரிவு செய்யப்பட்டதுடன்,இறுதிப்போட்டியின் நாயகனாக பற்றீசியின் அணியின் பிறிஸ்ரன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நட்சத்திரங்களின் கால்பந்தாட்டம்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்



நட்சத்திரங்களின் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஏற்பாட்டில், மகாதேவன் பூமாதேவி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் தகுதி பெற்றன. இறுதிப்போட்டி கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. இதில், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 05:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வெற்றிக்கு உறுதுணையாக 3 கோல்களைப் போட்ட, தில்லைகாந்தன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# சதுரங்கப் போட்டி

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் இளையோர்களுக்கான சதுரங்கப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே 07, 09, 11, 15, 17 ஆகிய வயதுப் பிரிவுகளில் போட்டி நடைபெறும்.

பாடசாலையூடாக விண்ணப்பிக்கத் தவறியோர் இன்று வெள்ளிக்கிழமை பற்பகல் 2.30 மணிக்கு சமுகம் தந்து பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இன்று பிற்பகல் 3.30 மணிக்குப்பின்னர் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு வருவது கட்டாயமானது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின்

## மகாலிங்கம் ஞாபகார்த்த பூப்பந்தாட்ட தொடர்







அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தீபாவளி தினத்தையொட்டி, அமரர் கனகலிங்கம் மகாலிங்கம் ஞாபகார்த்த பூப்பந்தாட்ட தொடர் ஒன்றை தமது உள்ளக அரங்கில் கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை நடத்தியது.

ஆண்களுக்கான ஒற்றையர் திறந்த போட்டியில் முதலாம்இடத்தை மட்டக்களப்பைச் சேர்ந்த சற்குணசீலன் பெற்றார். திருகோணமலையைச் சேர்ந்த நிலோயன் இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றெமின்சன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான இரட்டையர் திறந்த போட்டியில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றெமின்சன் - துசாந்தன் ஜோடி முதலிடத்தையும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நிலோயன், சற்குணசீலன் ஜோடி இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காண்டீபன் - கனிஸ்ரின் ஜோடி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான ஒற்றையர் திறந்த போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோய்கருன்யா முதலாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஹம்சாயினி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச.காண்டீபன் முதலிடத்தையும், வவுனியாவைச் சேர்ந்த சுபாஸ் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டார். (க-26)

# அதிக ஹட்ரிக்

## இலங்கை முன்னிலை



ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிகமுறை ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்திய அணிகளின் பட்டியலில் இலங்கை அணி முதலிடத்தில் உள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி சார்பில் இதுவரை 9 முறை ஹட்ரிக் விக்கெட்கள் வீழ்த்தப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் 8 முறை ஹட்ரிக்குடன் பாகிஸ்தான் அணி இரண்டாவது இடத்தில் உள்ளது.

மூன்றாவது இடத்தில் 6 ஹட்ரிக்குடன் அவுஸ்திரேலியா அணியும், நான்காவது இடத்தில் 5 ஹட்ரிக்குடன் வங்கதேச அணியும் உள்ளன.

இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இப்பட்டியலில் 4 ஹட்ரிக் குடன் ஐந்தாவது இடத்தில் உள்ளன.

நியூசிலாந்து மற்றும் இந்திய அணி 3 ஹட்ரிக்குடன் ஆறாவது இடத்தில் உள்ளது. (க)

## ஜனாதிபதியை...

வாகனப் பேரணியொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு காலி முகத்திடலுக்கு முன்பாக விருந்து நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பித்த இவ்வெதிர்ப்பு பேரணி மாலை நான்கு மணியளவில் சுதந்திர சதுக்கத்தில் நிறுவப்பட்டுள்ள டி.எஸ்.சேனநாயக்கவின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் நிறைவுக்கு வந்தது.

ஐ.தே.க.வின் செயலாளர் அகில விராஜ் காரியவசத்தின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பேரணியில் பாராளுமன்றில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கான வாகன அணிவகுப்புடன் காலிமுகத்திடலிலிருந்து புறப்பட்டு கொள்ளுப்பிட்டி சுற்றுவட்டாரத்தை கடந்து அலரி மாளிகையினருகினால் பயணித்தது.

இப்பேரணியானது அலரி மாளிகையினூடாக பயணிக்கையில் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையினுள் இருந்தவாறு பேரணிகாரர்களை நோக்கி கையசைத்த வண்ணமிருந்தார். இதனை அவதானித்த பேரணிகாரர்கள் தமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்புக்குட்பட்ட தலைவர் அவரே, மக்களின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே, தமது தலைவரை காப்பதோடு ஜனநாயகத்தை நிலை நிறுத்தவே இப்போராட்டம் என கூச்சலிட்டனர். (ம)

## வடக்கு அபிவி...

திபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

நீண்ட காலமாக இடம்பெற்று வந்த யுத்தத்தினால் பின்னடைவுக்குள்ளாகியுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை துரிதப்படுத்தி அம்மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக ஜனாதிபதியால் கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த விசேட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாத காலமாக இச்செயலணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகவும் மும்முரமாக செயற்பட்டு வருவதுடன், அந்த நடவடிக்கைகள் நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் பலமாக எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தவுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி இதற்கான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒன்றுபடுமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்த விசேட ஜனாதிபதி செயலணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தி வருவதுடன், மேலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் தொடர்பாகவும் திட்டமிட்டு வருகின்றது. முன்னுரிமை அடிப்படையிலான தேவைகள் குறித்து கண்டறிந்து அத்துறைகள் மற்றும் தனிப்பட்ட குழுக்களை இலக்காகக்கொண்டு புதிய அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த கலந்துரையாடலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிநீர் வழங்கல் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் மற்றும் அதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய உடனடி நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த மாகாணங்களில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி பிரச்சினைகள் மற்றும் மக்களின் தேவைகள் குறித்து இங்கு மாகாண ஆளுநர்களினால் விளக்கமளிக்கப்பட்டது.

மடு புண்ணிய பூமியில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்நிர்மாண நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் ஆனையிறவு உப்பளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட மேலும் விசேட அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்த அபிவிருத்தி திட்டங்களின் மூலம் இந்த இரண்டு மாகாணங்களிலும் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தை துரிதமாக முன்னேற்ற முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது எனத் தெரிவித்தார். (ம-9)

## வடக்கு காணி...

கட்டத்தை அடைந்துள்ளதாக ஜனாதிபதி செயலணியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணியின் நான்காவது கூட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு படையினரின் பொறுப்பிலுள்ள காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இதற்கு முன்னர் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் இந்த அனைத்து காணிகளையும் விடுவிப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

இம்மாகாணங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளை விரிவுபடுத்தல், கைத்தொழில் துறையினை முன்னேற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு படையினரின் பொறுப்பிலிருந்த அரசாங்க காணிகளில் 79.01 சதவீதமும் தனியாருக்கு சொந்தமான காணிகளில் 90.02 சதவீதமான காணிகளும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் 27 வருடங்களுக்கு பின்னர் விடுவிக்கப்பட்ட பெருமளவான காணிகளுக்கு மேலதிகமாக நடேஸ்வரா கல்லூரி உள்ளிட்ட பாடசாலைகளும் மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் உள்ளிட்ட பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமய ஸ்தலங்கள் மற்றும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பல வீதி களும் இதில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வடக்கின் பல...

ளனர். அத்துடன், நீர் நிலைகளின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

நாளை சனிக்கிழமை வரை மழையுடனான காலநிலை நீடிக்கும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணிநேரத்தில் 137.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிவரை 228 குடும்பங்களைச் சேர்ந்த 836 பேர் மழையுடன் கூடிய காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 552 பேர் பாதுகாப்பான 2 இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிவரை 202 குடும்பங்களைச் சேர்ந்த 647 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியாவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ம)

## ஐ.தே.கட்சியி...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கீழ் வலுவான அரசாங்கத்தை உருவாக்கி, வலுவான வரவு செலவுத்-திட்டம் முன்வைக்கப்படும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஹெரோயினுடன் மூவர் கைது

வவுனியாவில் தேக்கவத்தைப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தமது உடமையில் மறைத்து வைத்திருந்த மூன்று பேரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று மாலை 3.30மணியளவில் தேக்கவத்தைப் பகுதியில் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஹெரோயினை தமது உடமையில் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் மூவரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து 700 மில்லிக்கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

### பாராளுமன்றம் கூடும் போது

# பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் - ஐ.தே.க

பாராளுமன்றம் 14 ஆம் திகதி கூடும் போது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பு கட்டாயம் நடத்தப்படும். அதற்கு மாற்றுக்கருத்துக்கள் எதுவும் இல்லை. அதே போன்று எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரம் தொடர்பான தீர்மானமும் எடுக்கப்படும் என் ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் பிரதமர் ஆசனத்தில் யார் அமர்வார் என்பதை சபாநாயகர் தீர்மானிப்பார். அத்துடன் அரசியலமைப்பின் 33-வது உறுப்புரையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறைத்து ஆட்சி முறைமையை உறுதிப்படுத்துவதற்காக 19-ம் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதிக்கோ அவரால் நியமிக்கப்பட்டுள்ள பிரதமருக்கோ பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிமைப்பட வேண்டியதில்லை. அரசியலமைப்பை மீறி தொடர்ந்தும் செயற்படுவார்களாயின் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி - பாராளுமன்றம் கூட்டப்படும் போது பிரதமரின் இருப்பிடம் தொடர்பில் பிரச்சினைகள் ஏதும் ஏற்படுமா?

பதில் - அரசியல் தலைவர்களுக்கும் சபாநாயகருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்னர் சபாநாயகர் கடந்த மாதம் 26 ஆம் திகதி இருந்த அமைச்சரவையையும் பாராளுமன்ற உறுப்பினர்களையுமே ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருந்தார்.

ஆகவே பாராளுமன்றத்தில் யாருக்கு பெரும்பான்மை உள்ளது என்பதனை தெளிவாக அறிவித்து பிரச்சினையை இலகுப்படுத்துவார் என்ற நம்பிக்கையுள்ளது.

இது குறித்து சபாநாயகருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த போவதில்லை. ஜனநாயகத்துக்கு முக்கியதுவம் கொடுப்பவர் என்ற வகையில் சரியாக தீர்மானத்தை எடுப்பார் என்ற நம்பிக்கையுள்ளது. 14-ம் திகதி இடம்பெறப்போவது ஆசனத்துக்கான வாக்கெடுப்பல்ல, பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும்பான்மையுள்ளதா அல்லது மகிந்தவுக்கு பெரும்பான்மையுள்ளதா என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தீர்மானிக்கப்படும். (ம)

# உரிமைக்காக போராடுவதை கைவிடாது தொடர வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயகத்திற்காகவும், உரிமைக்காகவும் போராடும் மக்கள் தங்கள் போராட்டத்தினை கைவிடாது தொடர வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் குழப்ப நிலை தொடர்பில் நேற்று வியாழக்கிழமை விசேட காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள ரணில், தொடர்ந்து போராடினால் ஏகாதிபத்தியர்களின் கைகளுக்கு ஆட்சி செல்வதைத் தடுக்க முடியும் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் ஜனநாயகம் பணயக் கைதியாகி நேற்றுடன் 14 நாட்கள் ஆகின்றன. இந்த இருள் சூழ்ந்த கடுமையான நாட்களில் நீங்கள் ஜனநாயகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டீர்கள்.

நீங்கள் தானாகேவே முன்வந்து வீதியில் இறங்கி அன்று முதல் இன்று வரை பாரிய மக்கள் சக்தியைக் வெளிப்படுத்துகின்றீர்கள். அச்சுறுத்தல் மற்றும் மிரட்டலுக்கு மத்தியில் சவால்களை எதிர்கொண்டு தைரியமாகவும், ஆசீர்வாதத்துடனும் போராடும் நீங்கள் இந்த நாட்டை மீண்டும் ஊழல் மற்றும் ஏகாதிபத்தியர்களின் கைகளுக்கு செல்வதைத் தடுத்துள்ளீர்கள்.

நீங்கள் ஜனநாயகம், உரிமைக்காக எந்த நேரத்திலும், போராடுவதற்கு எழுந்து நிற்பது குறித்து, நான் என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்சி உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்களின் போராட்டத்திற்கும் அப்பால் சென்று எங்கள் சுதந்திரம், எங்கள் உரிமை, எங்கள் நாட்டிற்காக நீங்கள் போராடுகின்றீர்கள். இதனைக் கைவிடாமல் முன்னோக்கிச் செல்வோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

மஹஜன சம்பத
திகதி 2018/11/08
சீட்டிழுப்பு இலக்கம் 3785
A 1 4 0 3 1 8
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 1937
I 02 05 64 66
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1517 திகதி 2018/11/08
J C A
வெற்றி இலக்கங்கள் 31 35 52 62 போனஸ் இலக்கம் 15
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/11/08
சீட்டிழுப்பு இலக்கம் 470
லக்கினம் இடபம் வெற்றி இலக்கங்கள் 02 12 32 66 03
தேசிய லொத்தர் சபை

## வங்கிக்குச் சென்...

கோப்பாய் கட்டப்பிராயை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் கார்த்திகேசு (வயது 65) என்பவர் நேற்று நண்பகல் திருநெல்வேலியில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு சென்றுள்ளார்.

அங்கு திடீரென மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக வங்கி ஊழியர்கள் அவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்தனர். அப்போது அவரை சோதனை செய்த வைத்தியர் குறித்த நபர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## தனிமையில்...

கோப்பாய் வடக்கை சேர்ந்த சின்னத்தம்பி இராசு (வயது 65) என்பவர் வீட்டில் தனிமையாக வசித்து வந்துள்ளார். கடந்த செவ்வாய்கிழமை இவர் வீட்டில் இருப்பதை அயலவர்கள் அவதானித்துள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த நபரை காணவில்லை என வீட்டினுள் சென்று பார்த்த போது இவர் இறந்த நிலையில் சடலமாக இருப்பதை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு சடலம் மீட்கப்பட்டது. இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## ஜனாதிபதி செய...

அரசுடன் சேர்ந்து பிரதி அமைச்சராகப் பதவியேற்ற சதாசிவம் வியாழேந்திரன் பங்கேற்றதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முகஞ்சுழித்துக்கொண்டனர். அத்துடன், அவரின் வருகையால் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூட்டத்தில் கடிந்து கொண்டார் என அறிய முடிகின்றது.

மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். (ம)

## விக்னேஸ்வர...

செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் குறித்த பதவி நீக்க கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்திருந்தது.

அத்துடன் டெனீஸ்வரனை மீண்டும் அவர் வகித்த அமைச்சு பொறுப்பில் இருத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த உத்தரவை தமது அதிகார எல்லையை காரணம் காட்டி சி.வி.விக்னேஸ்வரன் மறுத்து வந்ததுடன் அதற்கு சவால் விடுத்து உயர்நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்றைய தினம் ப்ரியன்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்ணான்டோ ஆகிய நீதியரசர்கள் குழாமினால் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது, டெனீஸ்வரனை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்திருந்த உத்தரவை சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று தெரிவித்து அந்த மனுவை நிராகரிப்பதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சி.வி.விக்னேஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவை உதாசீனம் செய்ததாக தெரிவித்து பா.டெனீஸ்வரனினால் அவருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி மைத்...

கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, சர்வதேசம் இலங்கைக்கான முதலீடுகளை நிறுத்தியுள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த அரசியல் சர்ச்சையால் பொருளாதாரமே பாரிய வீழ்ச்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது.

மைத்திரி - மகிந்த தரப்பினர் தமக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ள பதவி மற்றும் பணத்தைக் கொண்டு ஆட்களை வாங்க முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். ஆனால், அது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதை அவர்கள் தற்போது உணர்ந்திருப்பார்கள்.

இந்நிலையில், அவர்கள் நாடாளுமன்றைக் கலைக்க முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது. எனினும், அரசியலமைப்புக்கு இணங்க 4 1/2 வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான ஆதரவு இருந்தால் மட்டுமே நாடாளுமன்றைக் கலைக்க முடியும். எனவே, ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

குறித்த காலத்துக்கு முன்னர் நாடாளுமன்றைக் கலைப்பதானது மக்களின் உச்சக்கட்ட ஜனநாயகத்தை மீறும் செயல் என்பதாலேயே, 19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றைக் குறித்த காலத்துக்கு முன்னர் கலைக்க முடியாது எனும் சரத்து கொண்டுவரப்பட்டது.

இன்று ஜனாதிபதி செய்த செயற்பாட்டால் அரசியலமைப்பு, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நாடு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில வாரங்களிலேயே டொலர் ஒன்றின் பெறுமதி 200 ரூபாயாகவும் உயர்வடையவுள்ளது.

சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கைக்கு செல்ல வேண்டாம் என சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தந்த நாடுகளால் எச்சரிக்கப்படுகிறது.

நாம், இலங்கையை ஒரு முன்னுதாரணமான நாடாக மாற்றியமைக்கவே இத்தனைக் காலமாக முயற்சித்தோம். ஆனால், இன்று அனைத்தும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் நாயகன் என அனைவராலும் பார்க்கப்பட்டுவந்த ஜனாதிபதி, தற்போது நாடாளுமன்றைக் கூட்டுவதற்குக் கூட அச்சப்படுகிறார். இது ஒரு சிறிய பிரச்சினையல்ல. சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கான நற்பெயர் எல்லாம் முற்றாக இல்லாதுபோயுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக நாட்டை அடகுவைக்கக்கூடாது. எனவே, ஒரு ஸ்தீரமான கொள்கையுடன் எதிர்க்காலத்திலேனும் ஜனாதிபதி செயற்பட வேண்டும்.

நாம் இதுதொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த இப்போதும் தயாராகவே இருக்கிறோம். பிழைகளை சரிசெய்துகொள்ள எமக்கு இன்னும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என கூறினார். (ம)

## ரணிலுக்கு எதி...

றையதினம் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளனர். பொலிஸ்மா அதிபரிடம் இந்த முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளது. (ம)

## கைதடிப் பகுதி...

சையா ரூபதர்மன் (வயது 32) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவரது சகோதரர்கள் கொழும்பில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் தீபாவளிதினத்தன்று உறவினர் வீட்டில் மதிய உணவு அருந்திவிட்டு சென்றுள்ளார். இரவு உணவு உண்பதற்கு வரவில்லை.

இந்த நிலையில் அடுத்த நாள்காலை அவரது வீட்டில் சடலமாக காணப்பட்டுள்ளார். உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சடலம் மீட்கப்பட்டது. இந்த மரண விசாரணையை தென்மராட்சி பகுதி மரண விசாரணை அதிகாரி இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9)

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 08 . 1938



மறைவு
07 . 11 . 2018

## அமரர் வெற்றிவேலு பத்மாவதி

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு பத்மாவதி நேற்று முன்தினம் (07.11.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும், ஆறுமுகம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வெற்றிவேலு அவர்களின் பாசமிகு மனைவியும், ஞானசேகரம், ஞானசம்பந்தர், காலஞ்சென்றவர்களான ஞானமலர், ஞானரூபன் மற்றும் ஞானசோதி, வசந்தி, காலஞ்சென்ற சுதன் மற்றும் ஜெகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, சொர்ணகாந்தி மற்றும் பாலகணபதிப்பிள்ளை, கெங்காலட்சுமி, நாகேஸ்வரி, அறஞ்செல்வி, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகிர்தா, லோகேஸ்வரி, யோகராஜா, தவபாலன், சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியாரும், திருநாவுக்கரசு, லக்சுமி, மங்கையற்கரசி, கமலாம்பிகை, விஸ்வலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், பிரின்ஜா, கஜானன், ஆரண்ஜா, அனோஜன், கபாஸ்கர், லக்ஷனா, தனுஜா, தஜீவன், பதிமலர், ஜீவமலர், கலையரசி, திருஷா, ராதிகா, அரவிந்தன், திருநிலவன், அறிவன், துருவன், துவாரகன், தரணியன், தருணிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாதனா, பவிஷன், விகான், கவினாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியக்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.
(6377)

தகவல்:
குடும்பத்தினர்


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



(C-4271)
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)

கிளினிக் நடைபெறும் திகதி:
யாழ்ப்பாணத்தில் 10.11.2018 நாளைய தினம்
பரந்தனில் 17.11.2018

(C-4370)

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை

இல.101, பிரதான வீதி,
(2-ம் குறுக்குத் தெரு சந்தியில்)
யாழ்ப்பாணம்.

பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம்,
பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்பு: 0774441082, 0774405969



போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
அதிபர் சேவை
SLPS - III
Nov - 11 Sun
9.00 - 3.00pm
விடய ஆய்வு,கல்வி
முகாமைத்துவம்
உளச்சார்பு, கல்வி
பொது அறிவு
விரிவுரையாளர்
S.நவநீதன்
M.அசோக்குமார்
இவ்வளவாளர்களின்
விரிவுரைகள்
இந்நிறுவனத்தில்
பிரதி ஞாயிறு மட்டும்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
தொ.பே: 0774696695



பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு

Share Market Workshop அடிப்படை முதலீட்டு உத்திகள்

CSE COLOMBO STOCK EXCHANGE

நவம்பர் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி - மாலை 4.00 மணிவரை
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, யாழ் - கிளையில்.

(சி-4306)

தொடர்புகளுக்கு: 021 222 1455 / 077 782 2014

பதிவுக்கட்டணம்
ரூபாய்: 1000/=


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.